தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 227 ஆடி 23
RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017
மதுரை, வெள்ளி, ஆகஸ்ட் 08, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**உக்ரைன் போர் விவகாரம்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப், புதின் விரைவில் சந்திப்பு**
....2-ம் பக்கம்

**வாக்காளர்கள் விவரங்கள்: தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு**
....3-ம் பக்கம்

**இந்திய கிரிக்கெட் அணியில் விராட், ரோகித் எதிர்காலம்: விரைவில் பி.சி.சி.ஐ. முடிவு**
....6-ம் பக்கம்





கலைஞரின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கலைஞரின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### இலங்கை கடற்படையால் கைதாகி சிறையில் உள்ள

# மீனவர்கள் 80 பேரை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுங்கள்

*** மத்திய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்**
*** 237 மீன்பிடி படகுகளை மீட்கவும் வலியுறுத்தல்**

சென்னை, ஆக. 08-

**இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று வலியுறுத்தி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு நேற்று (புதன்கிழமை) கடிதம் எழுதியுள்ளார்.**

**14 மீனவர்கள் கைது....**

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள், நேற்று முன்தினம் (06.08.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று வலியுறுத்தி, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

**பலமுறை கோரிக்கை...**

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:-

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு தூதரக ரீதியாக தலையிட வேண்டும் என்று தான் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும், இது போன்ற கைது சம்பவங்கள் தொடர்வது மிகவும் வருத்தமளிக்கிறது. 2025-ம் ஆண்டில் மட்டும் நடைபெற்ற கைது சம்பவங்களில், இது 17-வது சம்பவம்.

**உடனடி நடவடிக்கை...**

தற்போது, 237 மீன்பிடிப் படகுகளும், 80 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் இருப்பதாகவும், மீனவர்கள், அவர்களின் ஒரே வாழ்வாதாரமான பாரம்பரிய நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் உரிமையை இழந்துள்ளனர் என்பதை வேதனையுடன் சுட்டிக் காட்டுகிறேன். எனவே, கைது செய்யப்பட்ட அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுத்திடுமாறு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழகத்திற்கான மாநிலக்கல்வி கொள்கை:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிடுகிறார்

சென்னை, ஆக. 08-


**தமிழகத்திற்கான மாநிலக் கல்விக் கொள்கையை முதல்வர் ஸ்டாலின் இன்று வெளியிடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

திமுக அரசு பதவியேற்ற பின்னர், 2021-22 இடைக்கால பட்ஜெட்டில், தமிழகத்துக்கென மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை உருவாக்க, கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பை செயல்படுத்தும்விதமாக, தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கையை வடிவமைப்பது குறித்து ஆய்வு செய்திட, ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி த. முருகேசன் தலைமையில் 14 பேர் கொண்ட குழு கடந்த 2022-ல் அமைக்கப்பட்டது. இக்குழு, 650 பக்கங்கள் கொண்ட அறிக்கையை முதல்வர் ஸ்டாலினிடம் கடந்த ஜூலை மாதம் சமர்ப்பித்தது. இந்த நிலையில், தமிழகத்திற்கான மாநிலக் கல்விக் கொள்கையை முதல்வர் ஸ்டாலின் இன்று வெளியிடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




## மார்க்கெட் விலை நிலவரம்

| BSE | NSE |
|---|---|
| 79.27 | 21.95 |
| பாயிண்ட் 80,623.26 | பாயிண்ட் 24,596.15 |



**தங்கம்**
1 சவரன் ₹75,200
1 கிராம் ₹9,400



**வெள்ளி**
1 கிலோ ₹127,000
1 கிராம் ₹127.00

**டாலர்** ₹87.47

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

### உக்ரைன் போர் விவகாரம்:
# அமெரிக்க அதிபர் ட்ரம்ப், புதின் விரைவில் சந்திப்பு



**மாஸ்கோ: ஆக. 08-**

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புதினும் விரைவில் சந்தக்க உள்ளதாக ரஷ்ய அதிபர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பும், ரஷ்ய அதிபர் புதினும் விரைவில் சந்திக்கக் கூடும் என்று ரஷ்ய அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது. இரு தலைவர்களும் சந்திப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும், சந்திக்கும் இடம் உள்ளிட்டவை குறித்த ஆலோசனைகள் நடைபெறுவதாகவும் ரஷ்ய வெளியுறவு அமைச்சக ஆலோசகர் யூரி உஷாகோவ் தெரிவித்துள்ளார். டொனால்டு ட்ரம்ப் இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற பிறகு புதினைச் சந்திக்க இருப்பது இதுவே முதல் முறையாகும்.

ரஷ்யா-உக்ரைன் போர் விவகாரத்தில் புதினை ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வருகிறார். உக்ரைன் மீது தொடர்ந்து குண்டுகளை வீசி வருவதாக புதினை ட்ரம்ப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டிய நிலையில், இந்தச் சந்திப்பு நடைபெற உள்ளது. ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் உள்ளிட்டவற்றை வாங்கக் கூடாது என்று இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளை ட்ரம்ப் ஒரு புறம் மிரட்டி வரும் நிலையில், இரு தலைவர்களுக்கும் இடையே நடைபெற இருக்கும் இந்தச் சந்திப்பு உலக அளவில் கவனம் பெறத் தொடங்கியுள்ளது.

# கேரளாவில் பணிக்கு வராத 51 அரசு டாக்டர்கள் டிஸ்மிஸ்
### அமைச்சர் வீணா ஜார்ஜ் தகவல்

**திருவனந்தபுரம், ஆக. 08-**

கேரளாவில் முறையாக பணிக்கு வராத 51 அரசு டாக்டர்களை பணி நீக்கம் செய்யப்பட்டதாக அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்தார்.

கேரளா சுகாதார துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மாநில அரசின் மருத்துவ கல்வித்துறையின் கீழ் ஏராளமான டாக்டர்கள் பணியாற்றி வருகிறார்கள். இதில் பல டாக்டர்கள் முறையாக பணிக்கு வருவதில்லை என கண்டறியப்பட்டது. இதுகுறித்து நடத்தப்பட்ட விசாரணையில், 51 டாக்டர்கள் முறையாக பணிக்கு வருவதில்லை என்றும், சட்டவிரோதமாக விடுப்பில் இருந்ததும் தெரியவந்தது.

இது தொடர்பாக பல கட்டங்களாக அந்த டாக்டர்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீசு அனுப்பப்பட்டது. ஆனால், அதற்கு முறையான பதில் தரவில்லை. மேலும், மருத்துவப் பணிகள் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டும் மாநிலம் முழுவதும் அரசின் மருத்துவக்கல்வி துறையில் பணி செய்து வந்த 51 டாக்டர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளையொட்டி நேற்று, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சி.ஐ.டி. காலனி இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் ராஜாத்தி அம்மாள், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சருமான துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி, தயாநிதி மாறன், ஆ.ராசா ஆகியோர் உடனிருந்தனர்.

### வெள்ளம், நிலச்சரிவு:
# இமாசல்லில் பலி 199 ஆக உயர்வு

**சிம்லா, ஆக. 08-**

இமாசல பிரதேசத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுக்கு இதுவரை 199 பேர் பலியாகியுள்ளனர்.

இமாசல பிரதேசத்தில், பருவமழையையொட்டி பெய்து வரும் அதிகளவிலான மழையால் வெள்ளம், நிலச்சரிவு, மேகவெடிப்பு போன்றவை ஏற்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. கனமழையால் நிலச்சரிவு, வெள்ளம் மற்றும் மேகவெடிப்புகளும் ஏற்பட்டு பாதிப்பை உண்டு பண்ணுகின்றன. இமாசல பிரதேசத்தில் கடந்த பல நாட்களாக பெய்து வரும் மழையில் சிக்கி பலர் உயிரிழந்து உள்ளனர்.

வெள்ளம் தொடர்ச்சியாக, கால்நடைகள், வீடுகள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன என மதிப்பிடப்பட்டு உள்ளது. நீர் விநியோக திட்டங்கள், சாலைகள், மின்சார உட்கட்டமைப்புகள், பள்ளிகள், சுகாதார நலன், விவசாயம் மற்றும் வீட்டு வசதி சார்ந்த விசயங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளன என திட்டமதிப்பீடு செய்யப்பட்டு உள்ளது.

வானிலை தொடர்பான உயிரிழப்புகளில் 17 பேர் மேகவெடிப்பாலும், 20 பேர் நீரில் மூழ்கியும், ஒருவர் மின்சாரம் தாக்கியும், 9 பேர் வெள்ளப்பெருக்கில் சிக்கியும் மற்றும் 6 பேர் நிலச்சரிவிலும் பலியாகி உள்ளனர். மற்றவர்கள் கீழே விழுந்தும், நெருப்பு, மின்னல் தாக்கியும் மற்றும் பிற மழை தொடர்பான சம்பவங்களில் உயிரிழந்து உள்ளனர். இதுதவிர, 91 பேர் சாலை விபத்துகளில் உயிரிழந்து உள்ளனர்.

### புதுச்சேரியில்
# அரசுப்பள்ளி மாணவிகள் சீருடையை மாற்றம்

**புதுச்சேரி, ஆக. 08-**

புதுச்சேரி அரசு பள்ளிகளில் மாணவிகள் சீருடையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சுடிதாருக்கு மேல் ஓவர்கோட் அணிய கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது.

தமிழக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு சுடிதார் மீது ஓவர்கோட் அணியும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது. இதனை பின்பற்றி புதுச்சேரியிலும் சீருடையில் மாற்றம் கொண்டுவர கடந்த 2013-ம் ஆண்டு கல்வித்துறை நடவடிக்கை எடுத்தது. ஆனால் அதற்கு பல்வேறு அரசியல் கட்சிகள் சமூக அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தால் சீருடை மாற்றம் கைவிடப்பட்டது.

அதே நேரத்தில் பெரும்பாலான தனியார் பள்ளிகளில் மாணவிகள் ஓவர்கோட் அணியும் முறை நடைமுறையில் உள்ளது. ஓவர்கோட் சீருடை மாணவிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும் என கருதப்படுகிறது. இந்த நிலையில் புதுச்சேரி கல்வித் துறை துணை இயக்குனர் கவுரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதில், அரசு பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு சுடிதார் மேல் ஓவர்கோட் அணிய வேண்டும். இதற்கான வடிவமைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கண்காணிப்பு அதிகாரிகள் பள்ளி தோறும் சென்று தலைமை ஆசிரியரை சந்தித்து வடிவமைப்பை காண்பித்து மாணவர்கள் ஓவர்கோட் தைக்க அறிவுறுத்த வேண்டும்" என உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### கருணாநிதி நினைவு தினம்:
# புதுச்சேரி முதல்வர் மரியாதை



**புதுச்சேரி, ஆக. 08-**

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவு தினத்தையொட்டி புதுச்சேரி அரசு சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு முதல்வர் ரங்கசாமி, அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 7-ம் ஆண்டு நினைவு தினம் நேற்று புதுச்சேரி அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. இதற்காக கடற்கரை சாலையில் உள்ள மேரி ஹாலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் திருவுருவப் படத்துக்கு முதல்வர் ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் செல்வம், அமைச்சர் லட்சுமி நாராயணன், பேரவை துணைத் தலைவர் ராஜவேலு, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா, அரசு கொறடா ஏகேடி ஆறுமுகம், என்.ஆர். காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பாஸ்கரன், திமுக உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில் குமார், சம்பத், திமுக அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்று மலரஞ்சலி செலுத்தினர்.

# அமெரிக்காவுக்கு வலிமையுடன் பதிலளிக்க வேண்டும்: பினராயி

**திருவனந்தபுரம்,ஆக. 08-**


அமெரிக்காவின் அழுத்தத்திற்கு அடிபணியாமல் வலிமையுடன் பதிலளிக்க வேண்டும் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதால் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு டிரம்ப் 50 சதவீதம் வரி விதித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், இந்தியப் பொருட்களுக்கு 50% வரி விதிப்பதன் மூலம் அமெரிக்கா மீண்டும் ஒரு முறை அத்துமீறலில் ஈடுபட்டுள்ளது. இது உலகளாவிய வர்த்தகக் கொள்கைகளை அப்பட்டமாக மீறும் நடவடிக்கையாகும்.

இந்த நடவடிக்கை நமது பொருளாதாரத்தை வலுப்படுத்தும் இந்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஆபத்தில் ஆழ்த்துகிறது. இது கேரளத்தின் ஏற்றுமதியாளர்களை, குறிப்பாக கடல் உணவு, மசாலாப் பொருட்கள், தேயிலை மற்றும் தேங்காய் நார் ஏற்றுமதியாளர்களை கடுமையாகப் பாதிக்கும். இதனால் மாநிலம் முழுவதும் ஆயிரக்கணக்கான வாழ்வாதாரங்கள் ஆபத்தில் இருக்கிறது. இது பன்முகத்தன்மை என்ற கருத்து மீதான தாக்குதலும் கூட. நாம் வலிமையுடன் பதிலளிக்க வேண்டும், நமது இறையாண்மையை நிலைநிறுத்த வேண்டும், அழுத்தத்திற்கு அடிபணிய மறுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

### 08-08-2025



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பணவரவு கூடும். தொழில், வியாபாரம் சிறக்கும் அரசுப் பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படலாம். அதிகாரிகள் பாராட்டு பெருமை சேர்க்கும்.

**ரிஷபம்:-** வாழ்க்கையில் புதிய திருப்பங்கள் ஏற்படும். தீர்த்த யாத்திரை சென்று புண்ணியத்தை தேடிக் கொள்வார்கள். அதிகாரப் பதவிகள் கிடைக்க பெற்று உங்கள் அந்தஸ்து உயரும்.

**மிதுனம்:-** கடின உழைப்பின் காரணமாக வேளாவேளைக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். முன் கோபத்தை அடக்கினால் முன்னேற்றம் உண்டு. தேவையற்ற அலைச்சல்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கடகம்:-** அதிக தனலாபம் எதிர்பார்க்கலாம். வெற்றி மேல் வெற்றி ஏற்படும். புதிய நண்பர்கள் தொடர்பு, எதிர்பாலர் பால் ஈர்ப்பு ஏற்படும். தொழில் ஆர்வம் கூடுவதால், ஆதாயம் பெருகும்.

**சிம்மம்:-** தனவரவு மேம்பட்டு பொருளாதார நிலை சீர்படும். இனிய சுற்றுலாப் பயணங்களின் மூலம் இன்பம் பெருகும். எடுத்த காரியங்கள் யாவும் எளிதில் வெற்றி பெறும்.

**கன்னி:-** தேவையற்ற பண விரயங்கள் ஏற்படும். பிள்ளைகளின் உடல் நிலையில் அக்கறை தேவை. சிலருக்கு மன அமைதி குறையும். ஆயினும் தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**துலாம்:-** தாயின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். வாகனங்களில் அடிக்கடி ஏற்படும் பழுது காரணமாக பயண சுகம் குறையும். நீர்நிலைகளில் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

**விருச்சிகம்:-** தனலாபம் பெருகும். குடும்ப ஆரோக்கியம் மேம்பாடு அடையும். நிம்மதியான படுக்கை சுகம் ஏற்படும். புதிய நண்பர்கள் சந்திப்பு நலம் தரும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும்.

**தனுசு:-** எடுத்த காரியங்களில் தடை, தாமதங்கள் ஏற்படும். சுமாரான பணவரவு உள்ள நாள். ஆயினும் மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகள் மூலம் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்:-** நண்பர்கள் சந்திப்பாலும், தெய்வ பக்தியாலும் மனநிம்மதி கூடும். பலவகைகளிலும் பணம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு.

**கும்பம்:-** எதிர்பாராத வகையில் செலவுகள் ஏற்படும். வீண் பண இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்கவும். வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**மீனம்:-** இன்று, நல்ல வாகன யோகம், நல்ல வருமானம் உண்டு. படுக்கை அறை சுகங்கள் மற்றும் நல்ல, ருசியான உணவு வகைகள் ஆகியவையும் கிடைக்கும்.

### சிறப்பு எஸ்.ஐ. கொலை வழக்கு:
# கைதான தந்தை, மகன் நீதிமன்றத்தில் ஆஜர்

**திருப்பூர், ஆக. 08-**

உடுமலை அருகே போலீஸ் சிறப்பு எஸ்ஐ சண்முகவேல் கொலை வழக்கில் தந்தை, மகன் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

திருப்பூர் மாவட்டம் உடுமலை குடிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு எஸ்ஐ ஆக பணியாற்றி வந்தவர் சண்முகவேல். விசாரணைக்காக சென்ற இடத்தில் தந்தை மகன்கள் சேர்ந்து அவரை கொடூரமாக கொலை செய்தனர். இந்த வழக்கில் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூரை சேர்ந்த மூர்த்தி (66), அவரது மகன்கள் மணிகண்டன் (30), தங்கப்பாண்டி (28) ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.



இதில் நேற்று காலை கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்கள் மறைத்து வைத்திருந்த இடத்தை காட்டுவதற்காக சென்ற மணிகண்டன் போலீஸாரை அரிவாளால் தாக்க முயன்றதாக கூறப்படுகிறது. இதில் காயமடைந்த குடிமங்கலம் உதவி ஆய்வாளர் சரவணகுமார் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். போலீஸாரை தாக்க முயன்ற மணிகண்டன் என்கவுன்ட்டரில் சுட்டு கொல்லப்பட்டார்.

இதையடுத்து மணிகண்டன் உடல் பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதையடுத்து மூர்த்தி மற்றும் தங்கப்பாண்டி ஆகியோர் விசாரணைக்குப் பின் நேற்று உடுமலை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண் 2-ல் ஆஜர்படுத்தப்பட்டனர்.

### தற்காப்பிற்காக சுட்டோம்:
# திருப்பூர் என்கவுன்டர் சம்பவத்தில் காயமடைந்த எஸ்.ஐ. விளக்கம்

**திருப்பூர், ஆக. 08-**

என் மீது தாக்குதல் நடத்தியதால், தற்காப்பிற்காக மணிகண்டனை இன்ஸ்பெக்டர் சுட்டார் என காயமடைந்த எஸ்.ஐ. விளக்கமளித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் மகேந்திரன் எம்.எல்.ஏ. தோட்டத்தில் நேற்று சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் சண்முகவேல் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்.

சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் சண்முகவேல் கொலை வழக்கில் மூர்த்தி மற்றும் அவரது மகன் தங்கப்பாண்டியன் ஆகிய 2 பேர் சரண் அடைந்த நிலையில், தலைமறைவாக இருந்த மணிகண்டன் என்பவரை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர்.

தலைமறைவாக இருந்த மணிகண்டனை கைது செய்த போலீசார் அவனை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றபோது மணிகண்டன் வெட்டியதில் காவல் உதவி ஆய்வாளர் சரவணனுக்கு கையில் காயம் ஏற்பட்ட நிலையில், அவரை போலீசார் என்கவுண்டரில் சுட்டுக்கொன்றனர். என்கவுண்டர் நடந்தபோது என்ன நிகழ்ந்தது என்பது குறித்து காயமடைந்த உதவி ஆய்வாளர் சரவணன் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

உப்பாறு அணை ஓடை அருகே ஆயுதத்தை மறைத்து வைத்ததாக மணிகண்டன் கூறினான். ஆயுதத்தை எடுப்பதற்காக மணிகண்டனை அங்கு அழைத்து சென்றோம். அரிவாளை எடுத்து எங்களை மணிகண்டன் துரத்த ஆரம்பித்தான். ஆயுதத்தை கீழே போடுமாறு இன்ஸ்பெக்டர் எச்சரித்தும் மணிகண்டன் கேட்கவில்லை. அரிவாளுடன் துரத்தி வந்து என்னை கையில் மணிகண்டன் வெட்டினான். என் மீது தாக்குதல் நடத்திய பின்னர் தற்காப்பிற்காக இன்ஸ்பெக்டர்தான் சுட்டார். இவ்வாறு கூறினார்.

### கானாவில் ஹெலிகாப்டர் விபத்து:
# 2 அமைச்சர்கள் உள்பட 8 பேர் பலி

**கானா, ஆக. 08-**

மேற்கு ஆப்பரிக்காவில் ஹெலிகாப்டர் விபத்தில் 2 மந்திரிகள் உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்று கானா. இங்கு, தலைநகர் அக்ராவில் இருந்து அஷாந்தி பிராந்தியத்தில் உள்ள தங்க சுரங்க பகுதியான ஓபுவாசிக்கு ராணுவ ஹெலிகாப்டர் ஒன்று சென்றது. அதில் பாதுகாப்புத்துறை மந்திரி எட்வர்டு ஓமனே போமா மற்றும் சுற்றுச்சூழல் மந்திரி இப்ராகிம் முர்தலா முகமது உள்ளிட்ட அதிகாரிகள் இருந்தனர்.

ஹெலிகாப்டர் புறப்பட்ட சிறிது நேரத்தில் கீழே விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் ராணுவ மந்திரி மற்றும் சுற்றுச்சூழல் மந்திரி உள்பட 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். கானா வரலாற்றில் பதிவான மிக மோசமான விபத்தாக இது கருதப்படுகிறது. இதையடுத்து கானா அரசாங்கம் இந்த விபத்தை தேசிய துக்கமாக அறிவித்தது.

# பாகிஸ்தான் ராணுவ தளபதி மீண்டும் அமெரிக்கா பயணம்

**இஸ்லமபாத், ஆக. 08-**

பாகிஸ்டான் ராணுவ தளபதி மீண்டும் அமெரிக்காவுக்கு செல்கிறார்.

பாகிஸ்தான் ராணுவத்தின் தலைமைத் தளபதி ஆசிம் முனீர், இந்த வாரம் மீண்டும் அமெரிக்கா செல்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த மே மாதம் இந்தியா - பாகிஸ்தான் இடையே நடைபெற்ற மோதலுக்கு பிறகு தற்போது 2-வது முறையாக, பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி அமெரிக்காவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். இந்த வாரம், அவர் அமெரிக்கா செல்வார் எனக் கூறப்படும் நிலையில், இந்தப் பயணத்தில் அந்நாட்டின் உயர் தலைவர்களைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக கடந்த ஜூன் மாதம், ஆசிம் முனீர், 5 நாள்கள் பயணமாக அமெரிக்கா சென்று அந்நாட்டு அதிபர் டிரம்ப்பை நேரில் சந்தித்து பேசினார். அப்போது, வெள்ளை மாளிகையில் அவருக்கு அதிபர் டிரம்ப் விருந்தளித்தார்.

பெரும்பாலும், ஒரு நாட்டின் தலைவருக்கு மட்டுமே வழங்கப்படும் இந்த மரியாதையானது, பாகிஸ்தான் ராணுவத் தலைமைத் தளபதி ஆசிம் முனீருக்கு வழங்கப்பட்டது, சர்வதேச அளவில் கவனம் ஈர்த்தது.

மரம் மனிதனின் உரம்

# வெர்டிஸ் அதிபரான 20 வயது இளைஞர்

**சிட்னி, ஆக. 08-**

வெர்டிஸ் அதிபராக தனக்கு தானே அறிவித்துக்கொண்ட 20 வயது இளைஞர்.

குரோஷியா-செர்பியா நாடுகளுக்கிடையே வெர்டிஸ் என்ற சிறிய நாட்டை உருவாக்கி அதற்கு நான் தான் அதிபர் என தனக்கு தானே அறிவித்துக்கொண்ட 20 வயது ஆஸ்திரேலியா இளைஞர் இணையதளத்தில் வைரலாகி வருகிறார். இது குறித்து தி நியூயார்க் போஸ்ட் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டேனியல் ஜாக்சன் என்ற 20 வயது இளைஞன், குரோஷியா விற்கும் செர்பியாவிற்கும் இடையிலான டானூப் ஆற்றின் குறுக்கே 125 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரிமை கோரப்படதாக நிலத்தை வெர்டிஸ் குடியரசு நாடாக அறிவித்து அதன் அதிபர் நான் தான் என்று தனக்கு தானே அறிவித்துள்ளார்.

### சமூகத்துக்கு பணியாற்ற வேண்டும்:

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மாணவர்களுக்கு கோரிக்கை

**சென்னை, ஆக. 08-**

எம்.எஸ்.சுவாமிநாதனை அடியொற்றி, மேலும் பல மாணவர்கள் சமூகத்துக்குப் பணியாற்ற வேண்டும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



எம்.எஸ்.சுவாமிநாதன் நூற்றாண்டுப் பிறந்தநாளை யொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

தமது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரிலான ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு நிலம் வழங்கி, குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர்.நாராயணன் அவர்களுடன் இணைந்து, அங்குள்ள ஜே.ஆர்.டி. டாடா சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தைத் திறந்தும் வைத்தார் அன்றைய முதல்வர், தலைவர் கலைஞர்.

அவரது வழியிலான நமது திராவிடமாடல் அரசும், போரூர் வெட்லாண்ட் பார்க், தஞ்சை ஈச்சங்கோட்டை வேளாண் கல்லூரி ஆகியவற்றுக்குத் எம்.எஸ்.சுவாமிநாதனின் பெயரைச் சூட்டியுள்ளதோடு, பயிர்ப் பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்றும் அறிவித்து அவரது நினைவைப் போற்றி வருகிறோம்.

பருவநிலை மாற்றம் உட்பட இன்று நாம் எதிர்கொண்டு வரும் பல சவால்களைப் பல பத்தாண்டுகளுக்கு முன்பே கணித்து, எச்சரித்த மாபெரும் தொலைநோக்காளரான எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களை அடியொற்றி, மேலும் பல மாணவர்கள் சமூகத்துக்குப் பணியாற்ற வேண்டும் என அவரது நூற்றாண்டில் கோரிக்கையாக முன்வைக்கிறேன். தந்தையின் பணியையும் - புகழையும் போற்றும் சவுமியா சுவாமிநாதன் அவர்களது பணி சிறக்கவும் வாழ்த்துகள்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# புதுச்சேரி நெசவு தொழிலாளர்களுக்கு 20% அகவிலைப்படி உயர்வு: முதல்வர் ரங்கசாமி

**புதுச்சேரி, ஆக. 08-**

தொழிலாளர்கள் நெசவுக் கூலி அகவிலைப்படியில் 20 சதவீதம் ஆகஸ்ட் முதல் உயர்த்தி தரப்படும் என்று முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரி கூட்டுறவுத் துறை கைத்தறி பிரிவு மற்றும் காஞ்சிபுரம் நெசவாளர் சேவை மையம் சார்பில் புதுச்சேரியில் 11-வது தேசிய கைத்தறி தினவிழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாநில முதல்வர் ரங்கசாமி பேசியது: " விவசாயத்துக்கு அடுத்து கைத்தறி தொழில் தான் புதுச்சேரியில் இருந்தது இன்று பாதுகாக்க வேண்டிய தொழிலாக உள்ளது. 150 குடும்பங்கள் தான் தற்போது உள்ளதாக சொல்வார்கள். மற்றவர்கள் ஆர்வம் காட்டவில்லை. சிரமமான தொழில் இது. தற்போது கைத்தறி நலிவடைந்துள்ளது. கல்வி வளர்ச்சியில் அனைத்து குடும்பத்தினரும் உயர்கல்வி பெற்றுள்ளனர். மருத்துவர்கள், பொறியாளர்கள், செவிலியர்கள் என எல்லாரும் படிக்கிறார்கள். படித்தோர் இத்தொழிலுக்கு வருவதில்லை. கல்வி மூலம் பெரிய நிறுவனத்துக்கு வேலை செல்கிறார்கள். வெளிநாட்டுக்கு செல்கிறார்கள். வசதி வாய்ப்பு ஏற்படுகிறது. தொழில் செய்வோர் எண்ணிக்கையும், கைத்தறி ஆடை வாங்குவோரும் குறைந்துள்ளனர். கைத்தறி ஆடையை வாங்கி அக்குடும்பத்துக்கு வருவாய் தரவேண்டும்.

உயர்கல்வி பெறுவதால் பொருளாதார வளர்ச்சி நன்றாக இருக்கும். அதனால் நம் மாநிலத்திலும் உள்ளது. கைத்தறி தொழிலை வளர்க்க உதவிகள் செய்து தருவோம். பிரதம நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் நெசவு செய்யும் தொழிலாளர்கள் நெசவுக் கூலியில் தற்போது பெற்று வரும் அகவிலைப்படியில் கூடுதலாக 20 சதவீதம் உயர்த்தி ஆகஸ்ட் முதல் தரப்படும்" என்று முதல்வர் ரங்கசாமி கூறியுள்ளார்.

# பிரதமர் மோடியுடன் கமல் எம்.பி. சந்திப்பு



**புதுடில்லி, ஆக. 08-**

பிரதமர் மோடியை, ராஜ்யசபா எம்.பி.,யும், நடிகருமான கமல்ஹாசன் சந்தித்து பேசினார்.

தமிழகத்தில் இருந்து ராஜ்யசபாவுக்கு தேர்வான நடிகர் கமல்ஹாசன் கடந்த ஜூலை 25ம் தேதி டில்லி சென்று எம்.பி.,யாக பதவியேற்று கொண்டார். அவருக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து இருந்தனர். இந்நிலையில், கமல்ஹாசன் நேற்று ( ஆக.7) பிரதமர் மோடியை சந்தித்து பேசினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது: பிரதமர் மோடியை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். ஒரு கலைஞனாகவும், தமிழகத்தின் பிரதிநிதியாகவும் அவரிடம் சில கோரிக்கைகளை தெரிவித்திருக்கிறேன். அவற்றுள் தலையாயது கீழடி. தமிழின் தொன்மையை, தமிழ் நாகரிகத்தின் பெருமையை உலகிற்கு உரக்க சொல்லும் கீழடியின் முன்னெடுப்புகளுக்கு பிரதமர் உறுதுணையாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொண்டேன். இவ்வாறு அந்த பதிவில் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

# துணை ஜனாதிபதி தேர்தல் அட்டவணை வெளியீடு

**புதுடெல்லி, ஆக. 08-**

குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, “வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான கடைசி தேதி ஆகஸ்ட் 21. மாநிலங்களவை செயலாளர்தான் தேர்தல் அதிகாரி. வேட்புமனுக்களை வேட்டாளர்கள், மாநிலங்களவை அறை எண் 28-ல் தேர்தல் அதிகாரி அல்லது துணை தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்கலாம். பொது விடுமுறை இல்லாத நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடியும். இதற்கான வைப்புத் தொகை ரூ.15,000.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஆகஸ்ட் 22-ம் தேதி நடைபெறும். போட்டி இருந்தால் தேர்தல் செப்டம்பர் 9-ம் தேதி நடைபெறும். வாக்காளர்கள் காலை 10 மணி முதல் 5 மணி வரை நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அறை எண் F-101ல் வாக்குகளை செலுத்தலாம்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிவாகும் வாக்குகள் அன்றைய தினமே எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். குடியரசு துணைத் தலைவராக பதவி வகித்த ஜெகதீப் தன்கர் கடந்த ஜூலை 21-ம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனையடுத்து அந்த பதவியிடம் காலியாக இருப்பதை கடந்த ஜூலை 22 வெளியிடப்பட்ட அறிவிப்பில் உள்துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியது. இந்தச் சூழலில் தற்போது குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

### காஷ்மீரில் ராணுவ வாகனம் கவிழ்ந்து விபத்து:

# 3 ராணுவ வீரர்கள் பலி

**ஜம்மு, ஆக. 08-**

ஜம்மு காஷ்மிரில் ராணுவ வாகனம் பள்ளத்தில் கவிழுந்ததில் 3 ராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். 15 பேர் காயம் அடைந்தனர்.



ஜம்மு காஷ்மிரின் உதம்பூர் மாவட்டத்தில் மத்திய போலீஸ் படை ( சி.ஆர்.பி.எப்.,) வீரர்களை ஏற்றிக் கொண்டு ராணுவ வாகனம் மலைப்பாதையில் சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென வாகனம் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த பள்ளத்தாக்கில் கவிழந்து விழுந்தது. இந்த வாகனம் 187வது பட்டாலியனுக்கு சொந்தமானது. ஆகும்.

இந்த விபத்தில் சி.ஆர்.பி.எப்., வீரர்கள் 3 பேர் உயிரிழந்தனர். மேலும் 15 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். கட்வா பகுதியில் ராணுவ நடவடிக்கையை முடித்து விட்டு திரும்பி கொண்டிருந்த போது இந்த துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது. விபத்தில் ராணுவ வீரர்கள் 3 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் மனு தள்ளுபடி: சுப்ரீம் கோர்ட் அதிரடி

**புதுடெல்லி, ஆக. 08-**

தன்னை பதவிநீக்கம் செய்ய பரிந்துரைத்த உள் விசாரணை குழுவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிபதி யஷ்வந்த் வர்மா தாக்கல் செய்த மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது.



டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் யஷ்வந்த் வர்மா. இவரது வீட்டில் கடந்த மார்ச் மாதம் திடீரென ற்றிய தீயை அணைக்க முயன்றபோது ஒரு அறையில் பல மூட்டைகளில் கட்டுக்கட்டாக பணம் எரிந்து சாம்பலாகி கிடப்பது தெரியவந்தது. இந்த ரூபாய் நோட்டுக்களுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று நீதிபதி யஷ்வந்த் வர்மா மறுத்த நிலையில், அது குறித்து உண்மையை அறிய அப்போதைய இந்திய தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, குழு ஒன்றை அமைத்தார்.

இக்குழு தனது அறிக்கையை மே 3 அன்று இறுதி செய்தது. இதையடுத்து, அப்போதைய தலைமை நீதிபதி கன்னா, நீதிபதி வர்மாவிடமிருந்து பெறப்பட்ட பதிலுடன் குழுவின் அறிக்கையையும் சேர்த்து குடியரசுத் தலைவர் மற்றும் பிரதமருக்கு கடிதம் எழுதினார். இதை எதிர்த்து நீதிபதி யஷ்வந்த் வர்மா சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பளித்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தீபங்கர் தத்தா மற்றும் ஏ.ஜி.மாசிஹ் அமர்வு, உள் விசாரணைக் குழுவின் அமைப்பும், அதைத் தொடர்ந்து வந்த விசாரணை நடைமுறையும் சட்டவிரோதமானது அல்ல என்று தெரிவித்தனர்.

மேலும், “பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு தலைமை நீதிபதி கடிதம் அனுப்பியது அரசியலமைப்பிற்கு விரோதமானது அல்ல என்று நாங்கள் கருதுகிறோம். எதிர்காலத்தில் தேவைப்பட்டால் நடவடிக்கைகளை நீங்கள் எடுப்பதற்கு நாங்கள் சில கருத்துக்களைத் தெரிவித்துள்ளோம்” என்று கூறியது. இதனையடுத்து, உள் விசாரணை குழுவின் அறிக்கையை எதிர்த்து நீதிபதி யஷ்வந்த் வர்மா தாக்கல் செய்த மனுவை சுப்ரீம் கோர்ட் நேற்று தள்ளுபடி செய்தது.

### பீகார் வாக்காளர்கள் விவரங்கள்:

# தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, ஆக. 08-**

பீகாரில் நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் விவரங்களை அளிக்க தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

பீகார் வரைவு வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி முடிந்தநிலையில், கடந்த 1-ந்தேதி, வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில், 7 கோடியே 24 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே இருந்தன. 65 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டு இருந்தன.

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டால் நாங்கள் தலையிடுவோம் என்று சுப்ரீம் கோர்ட் கூறியிருந்தது.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் சூர்ய காந்த், உஜ்ஜால் புயன், கோடீஸ்வர் சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இம்மனுக்கள் மீண்டும் விசாரணைக்கு வந்தன. மனுதாரரான ஜனநாயக சீர்திருத்த சங்கம் என்ற தொண்டு நிறுவனம், நீக்கப்பட்ட 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்களையும், நீக்கத்துக்கான காரணத்தையும் வெளியிட தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிடக்கோரி புதிய மனு தாக்கல் செய்தது. ஜனநாயக சீர்திருத்த சங்கத்தின் வக்கீல் பிரசாந்த் பூஷணிடம் நீதிபதிகள், ‘‘தற்போது வரைவு பட்டியல் மட்டுமே வெளியாகி உள்ளது. நீக்கத்துக்கான காரணம் பின்னர் தெரிய வரும்’’ என்று கூறினர். தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான வக்கீலிடம் நீதிபதிகள், “நீக்கப்பட்ட 65 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளர்களின் விவரங்களை 9-ந்தேதிக்குள் தேர்தல் கமிஷன் சமர்ப்பிக்க வேண்டும். அதன் நகலை ஜனநாயக சீர்திருத்த சங்கத்திடம் அளிக்க வேண்டும். அதை பிரசாந்த் பூஷண் பார்க்கட்டும். என்ன சேர்க்கப்பட்டுள்ளது, என்ன சேர்க்கப்படவில்லை என்று பிறகு பார்ப்போம்’’ என்று தெரிவித்தனர்.

# அன்புமணிக்கு என்ன குறை வைத்தோம்: ராமதாஸ் வேதனை

**சென்னை, ஆக. 08-**

என் பிள்ளை அன்புமணிக்கு நாங்கள் என்ன குறை வைத்தோம் என்று ராமதாஸ் வேதனையுடன் தெரிவித்தார்.

பா.ம.க.வில் நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி இடையேயான மோதல் தொடர்ந்து நீடித்து வரும் வரும் சூழலில், பா.ம.க.வின் தலைமை அலுவலகம் என்று அன்புமணி அலுவலகத்தின் முகவரியை தேர்தல் ஆணையம் வெளியிட்டு இருந்தது. இது ராமதாஸ் தரப்பை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியதாக சொல்லபடுகிறது.

இந்த நிலையில், கட்சியின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் ஆக.17-ம் தேதி நடைபெறும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் அறிவித்துள்ளார். ராமதாசுக்கு போட்டியாக வரும் 9-ம் தேதி பொதுக்குழு கூட்டம் நடக்கும் என அன்புமணி தரப்பை சேர்ந்த வடிவேல் ராவணன் அறிவித்துள்ளார். இருவரும் பொதுக்குழுவை அறிவித்ததால் பா.ம.க.வினர் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், தைலாபுரத்தில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- தைலாபுரம் வீட்டிற்கு என்னை சந்திக்க வந்ததாகவும், நான் மறுத்ததாகவும் அன்புமணி பொய் சொல்கிறார். கட்சியில் எனக்கு தெரியாமல் பல்வேறு உள்ளடி வேலைகளை அன்புமணி செய்து வந்தார். சூழ்ச்சி செய்து பா.ம.க.வை பறிப்பதற்கு அன்புமணி முயற்சி செய்கிறார். என் மீது பிரியமாக இருந்தவர்களை பணம் கொடுத்து அன்புமணி அவரது பக்கம் இழுத்தார்.

48 ஆண்டுகாலம் கட்சியை கட்டிக்காத்தது நான் தான். கடுமையாக உழைத்து தண்ணீருக்கு பதில் வியர்வையை ஊற்றி கட்சியை ஒரு ஆலமரமாக வளர்த்தேன். ஆலமரக்கிளையில் இருந்தே கோடாரியை செய்து அதே மரத்தை வெட்ட முயற்சிக்கிறார்.

என் பிள்ளை அன்புமணிக்கு நாங்கள் என்ன குறை வைத்தோம்? மிகச்சிறந்த கல்வி கொடுத்தேன், எம்.பி., மத்திய அமைச்சர் என ஆக்கி அழகு பார்த்தேன். பா.ம.க. நிறுவனராக புதிய நிர்வாகிகளை சேர்க்கவும் மாற்றவும் எனக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. ஐயா, ஐயா என்று சொன்னவர்களை ராமதாஸ் என்று சொல்ல வைத்தது அன்புமணி தான். அன்புமணியிடம் கட்சியை கொடுத்துவிட்டு நான் தைலாபுரத்தில் டம்மியாக இருக்க முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# அன்புமணி பொதுக்குழுவுக்கு தடை கோரிய மனு இன்று விசாரணை

**சென்னை, ஆக. 08-**

அன்புமணி பொதுக்குழுவுக்கு தடை விதிக்கக்கோரிய மனு இன்று விசாரணைக்கு வருகிறது.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஆதரவு மாநில பொதுச்செயலாளர் முரளி சங்கர் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில், “கடந்த 2022-ம் ஆண்டு மே மாதம் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்ட அன்புமணியின் பதவிக்காலம் கடந்த மே மாதம் 28-ந்தேதியுடன் நிறைவடைந்து விட்டது.

கட்சியின் பொதுக்குழு, அவசர பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தை கூட்ட கட்சியின் நிறுவனருக்கே அதிகாரம் உள்ளது. தன்னைத்தானே தலைவர் என சொல்லிக்கொண்டு அன்புமணி செயல்படுகிறார். அவர் வருகிற 9-ந்தேதி கூட்டும் பொதுக்குழுவுக்கு தடை விதிக்கவேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்க கோரி நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு முறையீடு செய்யப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் இந்த வழக்கை இன்று விசாரிப்பதாக கூறினார்.

### கொடிக்கம்பம் விவகாரம்:

# அரசியல் கட்சிகளுக்கு மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவு

**மதுரை, ஆக. 08-**

கொடிக்கம்பங்களை அகற்றும் நடவடிக்கைக்கு தடை கோரிய வழக்கில், அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

மதுரை பழங்காநத்தம் பைபாஸ் ரோடு பகுதியில் அ.தி.மு.க.,கொடிக் கம்பம் நட அனுமதிக்க உத்தரவிட அதன் நிர்வாகி கதிரவன் மனு தாக்கல் செய்தார். இதை கடந்த ஜன.,27 ல் தள்ளுபடி செய்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், ‘தேசிய, மாநில நெடுஞ்சாலைகள், அரசின் பிற துறைகளுக்கு சொந்தமான பொது இடங்களில் உள்ள அரசியல் கட்சிகள், ஜாதி, மதம் சார்ந்த அமைப்புகளின் கொடிக்கம்பங்களை அகற்ற வேண்டும் என உத்தரவிட்டார்.

‘மார்க்சிஸ்ட் கட்சியின் கொடிக்கம்பங்களை அகற்றும் அரசின் நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும்,’ என அதன் மாநில செயலாளர் சண்முகம் மனு செய்தார். ஜூன் 20 ல் நீதிபதி சி.சரவணன் தள்ளுபடி செய்தார். இதை எதிர்த்து சண்முகம் மேல்முறையீடு செய்தார்.

ஜூலை 22ல் 3 நீதிபதிகள் அமர்வு,’விருப்பமுள்ள கட்சிகள் விளக்கமளிக்கும் வகையில் இவ்வழக்கில் இணைத்துக் கொள்ள இடையீட்டு மனுக்களை ஆக.,5க்குள் தாக்கல் செய்ய வேண்டும். கொடிக் கம்பங்களை அகற்றும் நடவடிக்கையை பொறுத்தவரை தற்போதைய நிலை தொடர வேண்டும்,’ என உத்தரவிட்டு ஆக.6க்கு ஒத்திவைத்தனர்.

இவ்வழக்கில் தங்களையும் ஒரு தரப்பாக இணைத்துக் கொள்ள அ.தி.மு.க.,-ம.தி.மு.க.,-- இந்திய கம்யூ.,-த.வெ.க., உள்ளிட்ட சில கட்சிகள், அமைப்புகள் இடையீட்டு மனுக்களை தாக்கல் செய்தன. நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஆர்.விஜயகுமார், எஸ்.சவுந்தர் அமர்வு விசாரித்தது.

அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: இவ்வழக்கில் இடையீட்டு மனு தாக்கல் செய்துள்ள அரசியல் கட்சிகள் தங்கள் தரப்பு வாதத்தை எழுத்துப்பூர்வமாக சுருக்கமாக ஆக.,12க்குள் தாக்கல் செய்ய வேண்டும். அதனடிப்படையில் அரசின் நிலைப்பாடு குறித்து கருத்து கோரப்படும். விசாரணை ஆக.,13க்கு ஒத்திவைக்கப்படுகிறது. இவ்வாறு உத்தரவிட்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சிறப்பு எஸ்.ஐ கொலை வழக்கில் என்கவுன்ட்டர் நடந்தது ஏன்..? மாவட்ட எஸ்.பி விளக்கம்

**உடுமலை, ஆக. 08-**

உடுமலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் படுகொலை சம்பவத்தில் தொடர்புடைய மணிகண்டன் போலீஸ் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொலை செய்யப்பட்டது குறித்து மாவட்ட எஸ்.பி கிரிஸ் யாதவ் விளக்கம் அளித்துள்ளார்.



எஸ்.பி கிரிஸ் யாதவ்



மணிகண்டன்

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே குடிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்தவர் சண்முகவேல் (57). குடிமங்கலம் காவல் எல்லைக்குட்பட்ட சிக்கனூத்து கிராமத்தில் மடத்துக்குளம் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மகேந்திரனுக்கு சொந்தமான தோட்டத்தில் தங்கி வேலை பார்த்து வந்த மூர்த்தி (66) என்பவருக்கும் அவரது மகன்களுக்கும் அடிதடி ஏற்பட்டுள்ளது.

இந்த தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல், கழுத்து அறுத்து படுகொலை செய்யப்பட்டார்.

இதில் தொடர்புடைய மூர்த்தி மற்றும் தங்கப்பாண்டி ஆகிய இருவரும் திருப்பூர் போலீஸில் சரணடைந்தனர்.

புதன்கிழமை இரவு தனிப்படை போலீஸார் மணிகண்டனை கைது செய்தனர்.

கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பிப்பதற்காக மணிகண்டனை அழைத்துக் கொண்டு போலீஸார் சிக்கனூத்து அருகே உள்ள உப்பாறு ஓடையில் சோதனை மேற்கொண்டனர். அப்போது என்கவுன்ட்டரில் மணிகண்டன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்நிலையில், மாவட்ட எஸ்.பி கிரிஸ் யாதவ் அளித்துள்ள விளக்கம் வருமாறு: கைது செய்யப்பட்ட மணிகண்டனை சம்பவம் நடந்த பகுதிக்கு அழைத்துச் சென்று விசாரிக்கப்பட்டது. அப்போது கொலைக்கு பயன்படுத்திய அதே அரிவாளை எடுத்து போலீஸாரை தாக்க முயன்றபோது தான் துப்பாக்கியால் சுட வேண்டிய சூழல் ஏற்பட்டது. அரிவாளை கீழே போடச் சொல்லி பலமுறை அறிவுறுத்தியும் மணிகண்டன் கேட்கவில்லை. 2 முறை துப்பாக்கியால் சுட்டதில் ஒரு குண்டு மணிகண்டன் மீது பாய்ந்து உயிரிழப்பு ஏற்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



அமெரிக்காவில் நமது பொருட்களுக்கு 50 சதவீதம் வரி விதிக்கும் போது, நாம் மட்டும் ஏன் 17 சதவீதத்துடன் நிறுத்த வேண்டும் நாமும் வரியை 50 சதவீதமாக அதிகரிக்க வேண்டும். இந்தியாவைப் பற்றி அவர்களுக்கு கவலை இல்லை என்றால், நாமும் அமெரிக்காவை பற்றி கவலைப்படக்கூடாது.

**- சசி தரூர்**



தைலாபுரம் வீட்டிற்கு என்னை சந்திக்க அன்புமணி வரவில்லை, நான் கதவையும் அடைக்கவில்லை. என்னை சந்திக்க வந்ததாகவும், நான் மறுத்ததாகவும் அன்புமணி பொய் சொல்கிறார். கட்சியில் எனக்கு தெரியாமல் பல்வேறு உள்ளடி வேலைகளை அன்புமணி செய்து வந்தார். சூழ்ச்சி செய்து பாமகவை பறிப்பதற்கு அன்புமணி முயற்சி செய்கிறார்.

**- ராமதாஸ்**



அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு தவறிவிட்டது. இப்போது ட்ரம்ப் மிரட்டி வற்புறுத்துகிறார். ஆனால் மத்திய அரசு அமைதியாக உள்ளது. 50 சதவீத வரி விதிக்க டிரம்ப் எடுத்த முடிவு வெளியுறவு கொள்கையில் ஒரு பேரழிவாகும். பிரதமர் மோடி இதனை சமாளிக்க முடியாமல் திணறுகிறார்.

**- மல்லிகார்ஜுன கார்கே**



மத்திய பா.ஜ.க. அரசு தமிழர்களை அழித்தொழிக்கும் இலங்கையை இனியும் நட்பு நாடென கூறுவதை விடுத்து, தமிழ்நாட்டு மீனவர்களை கைது செய்வதை தடுக்க கச்சத்தீவை திரும்பப் பெற்று நிரந்தர தீர்வினை காண வேண்டும். சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ள கச்ச தீவு தொடர்பான வழக்கை தமிழக அரசு விரைவுப்படுத்த வேண்டும்.

**- சீமான்**



அ.தி.மு.க. திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் வேம்பார்பட்டியில் துணை பொதுச் செயலாளரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளருமான முன்னாள் அமைச்சர் நத்தம் இரா.விசுவநாதன் முன்னிலையில் நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிவஞானபுரம் மற்றும் சி.புதூர் பகுதிகளை சேர்ந்த, தி.மு.க. மற்றும் மாற்றுக்கட்சியினர்கள் ஏராளமானோர் அக்கட்சிகளிலிருந்து விலகி தங்களை அ.தி.மு.க.வில் இணைந்தனர். உடன் நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தேன்மொழி, ஒன்றிய செயலாளர்கள் யாகப்பன், நல்லதம்பி, நிலக்கோட்டை பேரூர் செயலாளர் சேகர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## அருப்புக்கோட்டையில்
# எடப்பாடியார் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் எழுச்சி உரை; நகரமே விழா கோலம்
## அ.தி.மு.க. வினர் உற்சாகம்

அருப்புக்கோட்டை, ஆக. 08-

அருப்புக்கோட்டை நகருக்கு முன்னாள் முதல்-அமைச்சரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமி மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம் சுற்றுபயண பிரச்சாரத்திற்கு இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணி அளவில் நாடார் சிவன் கோவில் பகுதியில் எழுச்சி உறை ஆற்ற உள்ளார்.

அவரை வரவேற்கும் விதமாக அ.தி.மு.க. விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் ஆலோசனையின் படி நகரக் சார்பில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து நகர செயலாளர் சோலை சேதுபதி கூறுகையில். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியை



வரவேற்கும் விதமாக விருதுநகர் புறவழிச்சாலை மிலிருந்து புளியம்பட்டி ஆரிரங்கண் மாரியம்மன் கோவில், திருநகரம், பாம்பே மெடிக்கல், மேலரத வீதி வழி முழுவதும் சாலையின் இரு புறமும் அ.தி.மு.க. கொடி தோரணங்கள், மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 50-க்கும் மேற்பட்ட கரகாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், செண்டை மேளம் முழங்க மின்னொளியில் ஜொலிக்க,கலை குழுவினரின் கலை நிகழ்ச்சிகள், கொடி தோரணத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிவன் கோவில் சந்திப்பில் பொதுச் செயலாளர் எடப்பாடியார் எழுச்சி உரையாற்ற உள்ளார். கூட்டத்தில் மாவட்ட, நகர,ஒன்றிய, மகளிர் அணி, இளைஞர் இளம் பெண்கள் பாசறை, தொழிற்சங்க நிர்வாகிகள் பிற அணி நிர்வாகிகள் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். அனைவரையும் வரவேற்கிறேன். என்றும் எடப்பாடியாரின் உண்மை விசுவாசி அருப்புக்கோட்டை நகர செயலாளர் சோலை. சேதுபதி.

# திருமங்கலம் ரஜினி கோவிலில் சிறப்பு பூஜை புகைப்பட கண்காட்சி 50-வது ஆண்டு பொன்விழா



திருமங்கலம், ஆக. 08-

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் திரைத்துறை பயணத்தில் 50 ஆண்டு பொன் விழா என்பது அவரது ரசிகர்களால் வரலாற்று முக்கிய நிகழ்வாக கொண்டாடப் பட்டு வருகிறது.கடந்த 1975 ஆகஸ்ட் மாதம் வெளியான அபூர்வ ராகங்கள் திரைப்படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமான ரஜினிகாந்த் தற்போது 171 படங்களில் நடித்து திரைத் துறையில் 50 ஆண்டுகளை கடந்து புதிய சாதனை படைத்துள்ளார். இதையடுத்து உலகமெங்கிலும் உள்ள அவரது ரசிகர்கள் மற்றும் திரைத்துறையினர், இந்த 50 வது ஆண்டு பொன் விழாவை மிக பிரமாண்டமாக கொண்டாட தயாராகி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் நடிகர் ரஜினிகாந்தின் தீவிர பக்தரும்,முன்னாள் ராணுவ வீரருமான எஸ்.கார்த்திக், இந்தியாவிலே முதலாவதாக அமைத்துள்ள அருள்மிகு ஸ்ரீ ரஜினி கோவிலில் ரஜினிகாந்தின் திரைத்துறை பொன்விழா கொண்டாட்டங்கள் சிறப்பு வழிபாடு மற்றும் பூஜைகளுடன் நடைபெற்று வருகிறது.அதன்படி நடிகர் ரஜினிகாந்த் திரையுலகில் 50 ஆண்டுகளை நிறைவு செய்த வரலாற்று சாதனையை கொண்டாடும் விதமாகவும், அவரது 171வது திரைப்படமான கூலி அமோக வெற்றி பெற்றிட வேண்டியும் ரஜினி பக்தர்களின் ஆன்மீக திருத்தலமாக திகழ்ந்திடும் திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவிலில் சிறப்பு வழிபாடுகளும், வேத மந்திரங்கள் முழங்கிட பூஜைகளும் நடைபெற்றது.அப்போது கோவிலில் உள்ள மூலவர் ரஜினி மற்றும் உற்சவர் ரஜினி சிலைகளுக்கு பால், பன்னீர், இளநீர் உள்ளிட்ட 16 வகை அபிஷேக ஆராதனையுடன், தீபாராதனை காட்டப்பட்டதுடன் வழிபாட்டு நிகழ்வில் பங்கேற்ற பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

அத்துடன் திருமங்கலம் ரஜினி கோவிலில் கடந்த 50 ஆண்டுகளில் ரஜினிகாந்த் நடித்த அபூர்வ ராகம் முதல் கூலி வரையிலான திரைப்படங்களில் இருந்து நடிகர் ரஜினிகாந்தின் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட அரிய புகைப்படங்களின் தொகுப்பினை கண்காட்சியாக வைத்திருந்த நிகழ்வு ரஜினி பக்தர்களை வெகுவாக கவர்ந்தது. இது தொடர்பாக ரஜினி கோவில் நிறுவனர் எஸ்.கார்த்திக் கூறுகையில்:- எங்களது குல தெய்வமான ரஜினி திரைத்துறையில் அடியெடுத்து வைத்து 50வது பொன் விழா ஆண்டினை கொண்டாடும் வகையில் ஸ்ரீ ரஜினி கோவிலில் சிறப்பு பூஜைகளும், அவரது 5 ஆயிரம் புகைப்படங்களின் கண்காட்சியும் சிறப்புடன் நடைபெற்றது. அவர் பல்லாண்டு வாழ்ந்து தமிழக மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்றிட வேண்டும் என்பதே எங்களது வாழ்நாள் ஆவலாகும் என்று தெரிவித்தார். இந்தநிகழ்வு களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவில் நிறுவனர் எஸ்.கார்த்திக் மற்றும் அவரது குடும்பத்தினர் சிறப்புடன் செய்திருந்தனர்.

# சிட்ரோயன் இந்தியா - எச்டிஎஃப்சி வங்கி கூட்டணி:
## வாடிக்கையாளர்களுக்கான புதிய ஃபைனான்ஸ் சேவைகள்

சென்னை, ஆக 08-

சிட்ரோயன் இந்தியா, வாடிக்கையாளர்கள் மற்றும் டீலர்களுக்கான வாகன ஃபைனான்ஸ் சேவைகளை மேம்படுத்த இந்தியாவின் முன்னணி தனியார் வங்கியான எச்டிஎஃப்சி வங்கியுடன் கூட்டணி அமைத்துள்ளது. ஸ்டெலாண்டிஸ் குழுமத்தின் ஜீப் மற்றும் மாசெராட்டி பிராண்டுகளுக்குப் பிறகு, சிட்ரோயனுக்கும் வாடிக்கையாளர்களுக்கான சிறந்த ஃபைனான்ஸ் திட்டங்களை வழங்கும் முக்கிய பங்குதாரராக எச்டிஎஃப்சி செயல்பட உள்ளது. இந்த கூட்டணி மூலம், குறைந்த வட்டி விகிதங்கள், விருப்பமான தவணை திட்டங்கள் மற்றும் 30 நிமிடங்களில் டிஜிட்டல் முறையில் கடன் பெறும் எச்டிஎஃப்சி எக்ஸ்பிரஸ் கார் லோன் போன்ற பல நன்மைகள் வழங்கப்படும். டீலர்களுக்கான வொர்க்கிங் கேப்பிடல் மற்றும் இன்வெண்டரி ஃபைனான்ஸிங் வசதிகளும் இதில் அடங்கும்.

சிட்ரோயன் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு எளிமையான வாகனக் கடன் அனுபவத்தை வழங்க எச்டிஎஃப்சி வங்கியுடன் கைகோர்ப்பதில் நாங்கள் உற்சாகமாக உள்ளோம் என்று ஸ்டெலாண்டிஸ் இந்தியாவின் கூட்டாண்மைகள் மற்றும் நிறுவன வணிகத் தலைவர் ஷிஷிர் மிஷ்ரா கூறினார். மேலும் எச்டிஎஃப்சி வங்கியின் ரீடெயில் சொத்துப் பிரிவு குழுத் தலைவர் அர்விந்த் வோஹ்ரா கூறுகையில், சிட்ரோயனுடன் இணைந்து வாடிக்கையாளர்களுக்கு வேகமான, எளிய ஃபைனான்ஸ் அனுபவத்தை வழங்க நாங்கள் உறுதியுடன் செயல்படுகிறோம் என்று கூறினார்.

# சித்தையன் கோட்டை பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி



வத்தலகுண்டு, ஆக. 08-

திண்டுக்கல் மாவட்டம் சித்தையன் கோட்டை பேரூராட்சியில் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் பிளாஸ்டிக் ஒழிப்பு மழைநீர் சேகரிப்பு உள்பட அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து பவானி கணேஷ் குழுவினரின் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது,

இந்நிகழ்ச்சியில் சித்தையன் கோட்டை பேரூராட்சி தலைவர் போதும் பொண்ணு முரளி, பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு இளநிலை உதவியாளர் அப்துல் கரீம் துப்புரவு ஆய்வாளர் அபூபக்கர் மற்றும் அனைத்து வார்டு கவுன்சிலர்கள் பணியாளர்கள் சேடப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் பள்ளி மாணவ- மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# கீரனூரில் கலைஞர் நினைவு நாள்



ஒட்டன்சத்திரம், ஆக. 08-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீரனூரில் கலைஞரின் நினைவு நாள் ஒன்றிய செயலாளர் பொன்ராஜ் தலைமையில் கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பேரூர் செயலாளர் அன்பு (எ) காதர் பாட்சா, பேரூராட்சித் தலைவர் கருப்புசாமி, பேரூராட்சி துணைத்தலைவர் ஹாஜி அப்துல்சுக்கூர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அப்போலோ மருத்துவமனையில் மேம்பட்ட வடுயில்லா அறுவை சிகிச்சை முறைகள் அறிமுகம்

திருநெல்வேலி, ஆக 08-

இதய நோய்கள், ஆரோக்கியமற்ற உணவு முறைகள் மற்றும் அமர்ந்தபடி நடக்கும் வாழ்க்கை முறை ஆகியவற்றால் பெரும்பாலும் பாதிக்கப்படும் இதய நோய்கள் இந்தியாவில் ஒரு பெரிய சுகாதாரப் பிரச்சினையாகத் தொடர்கின்றன. பலர் அடைக்கப்பட்ட கரோனரி தமனிகளால் பாதிக்கப்படுகின்றனர், இதனால் இரத்த ஓட்டம் குறைதல், மார்பு வலி, மூச்சுத் திணறல், சோர்வு மற்றும் கடுமையான சந்தர்ப்பங்களில், மாரடைப்பு ஏற்படுகிறது.இதனால் இரத்த ஓட்டம் குறைவதுடன், நெஞ்சுவலி, மூச்சுத்திணறல், சோர்வு மற்றும் தீவிரமான நிலைகளில் இதயக் கோளாறு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். அதிநவீன மருத்துவப் பராமரிப்பில் முன்னோடியாக இருக்கும் அப்பல்லோ மருத்துவமனை, கிரீம்ஸ் லேனில் (அப்பல்லோ மெயின் மருத்துவமனை, சென்னை) மேம்பட்ட, குறைந்தபட்ச ஊடுருவல் இதய சிகிச்சைகளை வழங்குகிறது.

குறிப்பாக வயதான மற்றும் அதிக ஆபத்துள்ள நோயாளிகளுக்கு.வரவிருக்கும் விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை நிகழ்வுவிழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஆலோசனைகளை வழங்கவும், அப்பல்லோ மருத்துவமனைகள் பிராந்தியத்தின் சிறந்த தலையீட்டு இருதயநோய் நிபுணர்களில்ஒருவரைக் கொண்ட ஒரு சிறப்பு நிகழ்வை நடத்தும். டாக்டர் ரிஃபாய் சௌக்கத் அலி எம்ஆர்சிபி (யுகே), எப்ஆர்சிபி (லண்டன்), சிசிடி இன்கார்டியாலஜி (யுகே)எப்ஏசிசி (யுஎஸ்ஏ), எப்இஎஸ்சி (ஐரோப்பா)டாவி/டாவிஆர்(லண்டன்) இல் பெல்லோஷிப்சீனியர் ஆலோசகர், இருதயவியல், அப்போலோ மருத்துவமனைகள்தேதி,ஞாயிற்றுக்கிழமை, ஆகஸ்ட் 10, 2025நேரம்: காலை 9:00 - மாலை 6:00 இடம்.அப்பல்லோ மருத்துவமனைகள், பீஸ் ஹெல்த் சென்டர்,48/5, தெற்கு பைபாஸ் சாலை, புதிய பேருந்து நிலையம் அருகில்,திருநெல்வேலி – 627005, எஸ்பிஓசிய.ரொனால்ட் - +91 73581 48215 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

# இந்தியாவில் சிறப்பான 6 ஆண்டுகள் நிறைவை கொண்டாடி மகிழும் எம்ஜி மோட்டார்

சென்னை, ஆக 08-

ஜேஎஸ்டபிள்யூ எம்ஜி மோட்டார், இந்தியாவில் தனது செயல்பாடுகளின் ஆறாவது ஆண்டு விழாவை, பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடி மகிழ்கிறது. இதனையொட்டி, ஹெக்டர் மற்றும் ஆஸ்டர் கார்களுக்கு வரையறுக்கப்பட்ட காலத்திற்கு சிறப்பு ஆண்டுவிழா கொண்டாட்ட விலைகளை இது அறிவித்திருக்கிறது.கூடுதலாக, 100% ஆன்-ரோடு விலைக்கு நிதியுதவி மற்றும் இஎம்ஐ விடுமுறை சலுகைஆகிய சிறப்பு விருப்பத்தேர்வுகளை எம்ஜி ஹெக்டர் அறிவித்திருக்கிறது. இந்தியாவின் முதல் இன்டர்நெட் கார் என புகழ் பெற்றிருக்கும் எம்ஜி ஹெக்டரின் பெட்ரோல் மற்றும் டீசல் வகை கார்கள் கவர்ச்சிகரமான விலைகளில் வழங்கப்படுகின்றன. இப்போது அதன் ஷார்ப் ப்ரோ எம்டிவகை கார் ரூ.19.59 லட்சம் என்ற சிறப்பு விலையில் (எக்ஸ்-ஷோரூம், இந்தியா முழுவதும்) கிடைக்கிறது. இந்நிறுவனம் தனது 'பிளாக்பஸ்டர் எஸ்யூவி'யான எம்ஜி ஆஸ்டரின் அனைத்து வகைகளுக்கும் வரையறுக்கப்பட்ட குறைந்த காலஅளவிற்கு சிறப்பு விலையை அறிவித்திருக்கிறது. இக்காரின் விலை இப்போது ரூ.9.99 லட்சத்தில் (எக்ஸ்-ஷோரூம், இந்தியா முழுவதும்) தொடங்குகிறது.

இது குறித்து ஜேஎஸ்டபிள்யூ எம்ஜி மோட்டார் இந்தியாவின் தலைமை வர்த்தக அதிகாரி வினய் ரெய்னா கூறுகையில், மிக முக்கியமாக,எம்ஜி ஹெக்டர் மற்றும் எம்ஜி ஆஸ்டரை தங்கள் வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றியிருக்கின்ற எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. எம்ஜி மோட்டார் இந்தியா, தனித்துவமான மற்றும் மிகச்சிறந்த விற்பனை மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் அனுபவங்களை மறுவரையறை செய்வதில் முன்னணியில் உள்ளது. இந்தியச் சாலைகளில் 800 கோடி கிலோமீட்டருக்கும் அதிகமாகப் பயணித்துள்ள எம்ஜி ஹெக்டர் மற்றும் ஆஸ்டர் எஸ்யூவி கார்களை வாங்கும்போது மேலும் கூடுதல் சேமிப்பு ஆதாயத்தைப் பெறுவதற்கான இந்த வாய்ப்பு என்று கூறினார்.



மதுரை மாநகராட்சி பூங்கா முருகன் திருக்கோயில் உண்டியல் எண்ணும் பணி மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது. அருகில் அறநிலையத்துறை உதவி ஆணையர் பிரதீபா, ஆய்வாளர் இளவரசி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மேலூரில் சாலையோர வியாபாரத் தொழிலாளர்கள் சார்பில் நகராட்சி ஆணையரிடம் கோரிக்கை மனு



மேலூர், ஆக. 08-

மதுரை மாவட்டம் மேலூரில் நேற்று தமிழ்நாடு சாலையோர வியாபாரத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு தலைவர் துரைப்பாண்டி, செயலாளர் நாகேந்திரன் தலைமையில்40க்கும் மேற்பட்டோர் சாலையோர வியாபாரத் தொழிலாளர்கள் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணவேணி, நகராட்சி பொறியாளர் முத்துக்குமார் ஆகியோர்களிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

அந்த மனுவில் கூறியதாவது: நேற்று நெடுஞ்சாலை துறை நகராட்சி நிர்வாகம் காவல்துறை, மூலமாக எப்போதும் இல்லாதவாறு வியாபார பொருட்களை சேதப்படுத்தினர். நடைபாதை சாலையோர வியாபாரிகளுக்கு உள்ள சட்டதிட்டங்கள் அதற்கான அரசு ஆனை உச்சநீதிமன்ற தீர்ப்பு நடைபாதையில் உள்ள வியாபாரிகள் 418 பேருக்கு அடையாள அட்டை மற்றும் அரசு வழங்கிய இலவச தள்ளு வண்டிகள், அவர்களுக்கு வட்டியில்லா, சிறுதொழில்கடன் வழங்கி நகராட்சி அதிகாரிகளும் காவல்துறையும் சேர்ந்து கயிறு கட்டப்பட்டு அந்த கயிறுக்கு வெளிப்புறம் கடை வைத்துள்ள வியாபாரிகளின் தொழிலாளர்களின் வாழ்வாதார சட்டம் 2014 ன் படி உள்ள கடைகள் போடுபவர்களை இனி வரும் காலங்களில் தொந்தரவு செய்யக்கூடாது எனவும் நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, மற்றும் நகராட்சி நிர்வாகம் சாலையோர வியாபாரம் தொழிலாளர்களுக்கு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி கடைகளை நடத்திட அனுமதி வழங்கிடவும் கோரிக்கை மனு அளித்தனர்.

# கலைஞரின் 7-ம் ஆண்டு நினைவு தினம்



கமுதி, ஆக்.08-

கமுதியில் முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் 7 ஆம் ஆண்டு நினைவு தினம் வியாழக்கிழமை அனுசரிக்கப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி தி.மு.க. மத்திய ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் எஸ்.கே.சண்முகநாதன் தலைமையில், அவைத்தலைவர் கிழவராஜன் முன்னிலையில் முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியின் 7-ம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து தேங்காய் உடைத்து சிறப்பு பூஜை செய்யப்பட்டது. கட்சியினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் ஒன்றிய பொருளாளர் தங்கப்பாண்டி, மாவட்ட பிரதிநிதி முருகேசன், ஒன்றிய துணைச் செயலாளர் தங்கப்பாண்டி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பழனி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் துரைமுருகன், புதுக்கோட்டை முன்னாள் கிளை செயலாளர் வாட்டர் போர்டு முத்துராமலிங்கம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டி, கிளைச் செயலாளர்கள் செந்தூர்பாண்டி, தர்மலிங்கம், பொங்கிஅரியப்பன், முருகன், பெரியசாமி, முனியசாமி, உள்பட திரளான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அரவங்குறிச்சியில் சட்டவிரோத மதுபான கடைகளை அகற்ற கோரி போராட்டம்



நத்தம், ஆக. 08-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே அரவங்குறிச்சியில் பஸ் நிலையம் முன்பாக தமிழர்தேசம் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதற்கு தமிழர் தேசம் கட்சியின் மாநில மாணவரணி செயலாளர் பூமிஅம்பலம் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆண்டிஅம்பலம், அவை தலைவர் சேகர்,மாவட்ட இணைச் செயலாளர் பூவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் அரவங்குறிச்சியில் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் குடியிருப்புகளுக்கு அருகில் செயல்பட்டு வரும் சட்டவிரோத மதுபானங்கள் விற்பனை செய்யும் மதுபான கடைகளை அகற்ற கோரி கோஷங்கள் எழுப்பபட்டது. ஆர்ப்பாட்டத்தில் தமிழர் தேசம், பா.ஜக கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# போன்பே இண்டஸ் ஆப்ஸ்டோர் மற்றும் அல்காடெல் இணைப்பு: புதிய ஸ்ட்ராட்டஜிக் பார்ட்னர்ஷிப்

**சென்னை, ஆக 08-**

இந்தியாவின் உள்நாட்டு ஆண்ட்ராய்டு ஆப் மார்க்கெட் பிளேஸான இண்டஸ் ஆப்ஸ்டோர், பிரஞ்சு நுகர்வோர் தொழில்நுட்ப பிராண்டான அல்காடெல் உடன் ஒரு ஸ்ட்ராட்டஜிக் ஓஇஎம் பார்ட்னர்ஷிப் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒத்துழைப்பு, அல்காடெல் ஸ்மார்ட்போன்களில் இண்டஸ் ஆப்ஸ்டோரை முன்பே நிறுவி, இந்தியாவிலுள்ள மில்லியன் கணக்கான பயனர்களுக்கு உள்ளூர்மயமாக்கப்பட்ட, தானியங்கி மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஆப் அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன் அமைந்துள்ளது.45 பிரிவுகளில் சரிபார்க்கப்பட்ட ஆப்கள், 12 இந்திய மொழி ஆதரவு மற்றும் குரல் தேடல் வசதியுடன் கூடிய இண்டஸ் ஆப்ஸ்டோர், பயனர்கள் தேவைக்கு ஏற்ப ஆப்களை தேடவும், வீடியோ முன்னோட்டம் மூலம் தேர்வு செய்யவும் அனுமதிக்கிறது. இது பாரம்பரிய ஆப் விநியோக மாடல்களுக்கு மாற்றாக செயல்படுகிறது.

இது குறித்து இண்டஸ் ஆப்ஸ்டோர் தலைமை வணிக அதிகாரி பிரியா எம்.நரசிம்மன் கூறுகையில்,இந்தியாவில் ஆல்காடெல் தனது பயணத்தைத் தொடங்கும் இந்த கட்டத்திலேயே அவர்களுடன் இணைவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். உள்ளூர்மயமாக்கப்பட்ட தளத்தின் மூலம், பயனர்கள் ஆப்களை எளிதாக கண்டறிந்து பயன்படுத்தலாம் என்றார். மேலும் நெக்ஸ்ட்செல் இந்தியா தலைமை வணிக அதிகாரி அதுல் விவேக் கூறுகையில், அல்காடெல் ஸ்மார்ட்போன்களை மீண்டும் அறிமுகப்படுத்தும் இந்நேரத்தில், உள்ளூர் நுகர்வோருக்கான பொருத்தமான டிஜிட்டல் அனுபவத்தை வழங்குவதற்காக இண்டஸ் ஆப்ஸ்டோர் உடன் இணைவது முக்கிய முன்னேற்றமாகும்.இது நம்பிக்கையுடன் கூடிய நீண்டகால ஒத்துழைப்பாக இருக்கும் என்று கூறினார்.

# சென்னையில் மேக்ஸிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்

**சேலம், ஆக 08-**

இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் கண் பராமரிப்பு வழங்குநர்களில் ஒன்றான மேக்ஸிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்ஸ் ('மேக்ஸிவிஷன்'), சென்னை முழுவதும் 10 கண் மருத்துவமனைகள்/பார்வை மையங்களைத் தொடங்குவதன் மூலம் சென்னையில் அதன் மூலோபாய விரிவாக்கத்தை அறிவித்தது. மேக்ஸிவிஷன் ஐ ஹாஸ்பிடல்ஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் GSK வேலு மற்றும் இணைத் தலைவர் டாக்டர் காசு பிரசாத் ரெட்டி ஆகியோரின் முன்னிலையில், முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் திரு. மகேந்திர சிங் தோனி (MS Dhoni) அவர்களால் இந்த மருத்துவமனை மற்றும் பார்வை மையம் தொடங்கிவைக்கப்பட்டது. மேக்ஸிவிஷன் ஐ ஹாஸ்பிடல்ஸ், சென்னையின் கிளினிக்கல் & அகாடமிக் இயக்குநர் டாக்டர் P. கணேஷ் மற்றும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கான பிராந்திய மருத்துவ இயக்குநர் டாக்டர் ஷிபு வர்க்கீ ஆகியோரும் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

மேக்ஸிவிஷன் சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஐ ஹாஸ்பிடல்ஸ் இன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் GSK வேலு கூறுகையில், "இது எங்களுக்கு நீண்ட காலமாக காத்திருக்கும் ஒரு விஷயம், மேலும் மேக்சிவிஷனின் நிறுவன தலைமையகம் அமைந்துள்ள சென்னைக்கு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அதிக தேவை உள்ள, அதிக சாத்தியம் கொண்ட சென்னை சந்தையில் எங்கள் தடத்தை விரிவுபடுத்துவதில் ஒரு மூலோபாய முன்னோக்கிய படியை இன்றைய தினம் குறிக்கிறது. MS தோனி மூலம் சென்னையில் எங்கள் பிரமாண்டமான துவக்கமானது, வளர்ந்து வரும் கண்புரை பாரம், விழித்திரை, க்ளோகோமா மற்றும் பல பார்வைக் கோளாறுகளை திறம்பட நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு வலுவான, பரவலாக்கப்பட்ட கண் மருத்துவ உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான எங்கள் நீண்டகால தொலைநோக்குப் பார்வையுடன் ஒத்துப்போகிறது.

# உலகளாவிய திறமைகளை தமிழ்நாட்டில் உருவாக்கும் புதிய முயற்சி..!

**சென்னை, ஆக 08-**

வழிகாட்டுதல் தமிழ்நாடு மற்றும் DLF உடன் இணைந்து கிரியேட்வொர்க்ஸ் வழங்கிய GCC அடுத்த உச்சி மாநாடு 2025, சென்னை வர்த்தக மையத்தில் 900+ CIOக்கள், CXOக்கள் மற்றும் மூத்த GCC தலைவர்கள் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து கலந்து கொள்ள, கோலாகலமாக நிறைவடைந்தது. "எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் GCCகள்: AI உலகளாவிய திறன் மையங்களை எவ்வாறு மறுவடிவமைக்கிறது" என்ற கருப்பொளை மையமாக் கொண்டு இந்த உச்சிமாநாடு பெரும் கவனத்தை ஈர்த்தது. மாநாட்டிற்கு தலைமை தாங்கிய, தமிழ்நாடு அரசின் தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா, தனது உற்சாகமான உரையாடல் மற்றும் பார்வையாளர் ஈடுபாட்டின் மூலம் ஒரு ஊக்கமளிக்கும் தொனியை உருவாக்கினார். அமைச்சரின் உரையானது மாநிலத்தில் உள்ள ஜி.சி.சிக்களின் எதிர்காலத்திற்கு ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்தது.

"தமிழ்நாடு தயாரிப்புக்கு முன்னுரிமை அளிக்கும் மாநிலமாக மாற வேண்டும். நாம் முன்னோக்கி இருந்து உருவாக்க வேண்டும், யாரையும் பின்பற்றக்கூடாது. மேலும் இந்தியாவை மதிப்பிடும் ஒவ்வொரு உலகளாவிய நிறுவனத்திற்கும், எனது அழைப்பு திறந்திருக்கும் - தமிழ்நாட்டுக்கு வாருங்கள், வழிகாட்டுதல் அலுவலகத்தில் நேரத்தை செலவிடுங்கள், இங்கிருந்து இலவசமாக வேலை செய்யுங்கள், வித்தியாசத்தைப் பாருங்கள்." என்று குறிப்பிட்டார்.

மரம் மனிதனின் உரம்

Printed Published and Owned by S.Manimaran, Printed at Manimaran Printers at 9, Dindigul Main Road, vilangudi, Madurai - 625 018.
Phone: 0452- 2668165, 0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

# நீட் தேர்வில் வெற்றி பெற்ற செந்துறை அரசுபள்ளி மாணவனுக்கு பாராட்டு



**நத்தம், ஆக. 08-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை-திருநூத்துபட்டியை சேர்ந்தவர் பழனிச்சாமி தையல் தொழிலாளி. இவரது மனைவி வாசுகி . இவர்களது மகன் நிதிஷ்குமார். இவர் செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளியில் 12-ம் வகுப்பு வரை படித்தார். இந்நிலையில் நடந்து முடிந்த நீட் தேர்வில் நிதிஷ்குமார் தமிழக அரசு அறிவித்த 7.5 இட ஒதுக்கீட்டில் 430 மதிப்பெண் பெற்று தேர்ச்சியடைந்து நாகபட்டினம் அரசு மருத்துவ கல்லூரியில் சேர்ந்துள்ளார். இதற்காக செந்துறை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் திண்டுக்கல் மாவட்ட கல்வித்துறை சார்பில் மாணவனுக்கு பாராட்டு விழா நடந்தது.இதற்கு பள்ளி தலைமையாசிரியர் தேவமனோகரி தலைமை தாங்கினார்.

உதவி தலைமையாசிரியர்கள் ராஜாக்கிளி, வாசுகி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் மாவட்ட கல்வி அலுவலர் நாகேந்திரன் கலந்து கொண்டு மாணவன் நிதிஷ்குமாரை பாராட்டி கேடயமும், பரிசுகளும் வழங்கினார்.தொடர்ந்து நாகசிவா சிட்பண்ட்ஸ் நிர்வாக இயக்குநர் நாகராஜ்பிள்ளை,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சவரிமுத்து உள்ளிட்டோரும் மாணவனுக்கு வாழ்த்துகளை தெரிவித்து பரிசுகளை வழங்கினர். விழாவில் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

## பொது அறிவிப்பு

அடியிற்கண்ட தேனி மாவட்டம். போடிநாயக்கனூர் தாலுகா, மேலச்சொக்கநாதபுரம் கிராமம், கழுகுமலைப் புலத்தில். பழைய பட்டா நம்பர் 6364. புதிய பட்டா நம்பர் 7430- க்கு சர்வே 188/2C2 நம்பரில் செண்ட் 05-ம். சர்வே 188/3A2 நம்பரில் செண்ட் 08-ம். சர்வே 188/3B2 நம்பரில் செண்ட் 37ம் ஆக மொத்தம் செண்ட் 50 உள்ள புஞ்சை நிலத்தை போடிநாயக்கனூர் சார்பதிவாளர் ஆவண எண் :4257/2022- படி அதன் உரிமையாளர்களான ஞானபிரபா. சுயம்பு ஆகியோர்களிடமிருந்தும். தேனி மாவட்டம், போடிநாயக்கலூர் தாலுகா, மேலச்சொக்கநாதபுரம் கிராமம், பட்டா எண்கள்: 6229, 6238 -ல் கண்டுள்ள சர்வே எண்கள்: 188/3A1, 188/3B1B, 188/2C1B -க்கு கட்டுப்பட்ட 23 செண்டு நிலத்தை அதன் உரிமையாளரான தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் டவுனில் குடியிருக்கும் சௌந்தரராஜன் மனைவி சுதா ஆகியோர்களிடமிருந்தும். ஆக மேற்படி நபர்களிடமிருந்து மொத்தம் 73 செண்டு நிலத்தை திருப்பூர், வேலம்பாளையம், அம்மன் நகர் 15. தென்னகர், சொர்ணபுரி, டோர் 35 நம்பர். மனையில் குடியிருக்கும் மணி குமாரர் அய்யப்பன் ஆகிய நான் கிரையம் பெற உள்ளதால் இது குறித்து யாருக்கேனும் எந்த ஆட்சேபணையாவது இருந்தால் இந்த பொது அறிவிப்பு வெளியான 07 நாட்களுக்குள் ஆட்சேபணையை எனக்கு உரிய முறையில் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சம் மேற்படி சொத்து தொடர்பாக பின்னாளில் எடுக்கும் சட்ட நடவடிக்கைகள் என்னை கட்டுப்படுத்தாது என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

இப்படிக்கு
M.அய்யப்பன்

---

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், இராமநாதபுரம்

முத்துக்குமார்,
த/பெ. நடராஜன்,
155/1, இளங்கோவடிகள் தெரு,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
.......... மனுதார்

எதிர்

கோட்டாட்சியர் அவர்கள்,
பிறப்பு இறப்பு பதிவுஅதிகாரி,
கோட்டாட்சியர் அலுவலகம்,
இராமநாதபுரம்.
.......எதிர்மனுதார்

அறிவிப்பு

எனது மகன் காந்திராஜ் என்பவர் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், 8/6,நிஜாம் தெரு, ஆர்.எஸ்.மங்கலம் என்ற முகவரியில் உள்ள வீட்டில் வைத்து கடந்த 02.10.1988 அன்று பிறந்தான். அப்போது அறியாமையின் காரணமாக எனது மகன் காந்திராஜ் பிறப்பை பதிவு செய்யாமல் விடுபட்டு போனது. எனவே, எனது மகன் காந்திராஜ் பிறப்பை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துகொள்ளலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

முத்துக்குமார்,
மனுதாரர்.

---

திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றம்
இ.ஏ.எண் 1/2024 இல்
இ. பி.எண் 68/2022 இல்
ஒ.எஸ்.எண் 214/2018

திரு பாலசுப்ரமணியம்
S/o சண்முகம்
திருமதி. உமாராணி,
W/O. R.ஸ்ரீநிவாசதயாநிதி
D.No.4/89, கர்ணம் தெரு,
ஆத்தூர். திண்டுக்கல் - 624701
--- மனுதார்
..... 2 ம் எதிர்மனுதார்

மேற்படி மனுதார் வாதி மேற்படி இபி மனுவில் கண்ட சொத்து விபரத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இம்மனுவில் திருத்தம் செய்துகொள்ள வேண்டி மனு செய்துள்ளதில் 20/08/2025-ம் நாள் வாய்தா ஏற்பட்டுள்ளதில் தங்களது ஆட்சேபணைகளை அன்று காலை 10.00 மணி அளவில் சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது அட்வகேட் மூலமோ ஆஜராகி தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும்பட்சத்தில் விஷயம் எக்ஸ் - பார்ட்டியாக தீர்மானிக்கப்படும்

வெ.ஆறுமுகம் B.A.B.L.,
செ.குமரேசன் M.B.A.LL.B
அட்வகேட்ஸ், திண்டுக்கல்.

---

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர் (இருப்பு: வெள்ளரிபட்டி, மதுரை)
அ.தி.மு.4678/25/அ3
நாள்: 01.07.25

M.முத்தையா,
S/o.லேட்.மு.முத்துராமன்,
2/67, வெள்ள;ர் அஞ்சல், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்-625109.
--- மனுதாரர்

--- எதிரிடை ---

உயர்திரு மேலூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் , மேலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேலூர், (இருப்பு) வெள்ளரிப்பட்டி, மதுரை.
--- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான் எனது தந்தை மு.முத்துராமன் (த/பெ.முத்தையா) என்பவர் கடந்த 20.03.2008-ம் தேதி அன்று மேற்படி மனுதாரரான என்னுடைய முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனுவின் விசாரணை மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால், இந்த அறிவிப்பு வெளியான இன்றிலிருந்து (08.08.2025) 15 தினங்களுக்குள் மேற்படி மேலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்: M.முத்தையா,
மேற்படி விலாசம்

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.3316/2025/ஆ6
பி.ப. வ.எண்.36/2025/ஆ6

சாராள் தவமணி ,
க/பெ. ஜஸ்டின் தாஸ்,
43/124,,தெற்கு 1 வது குறுக்கு தெரு,
முத்தழகுபட்டி ,
பள்ளபட்டி, பேகம்பூர்,
திண்டுக்கல் மேற்கு வட்டம்,
திண்டுக்கல்.
..மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் மகன் J. ஆண்ட்ரூ ஜஸ்ரா கடந்த 05.05.2021ம் தேதி திண்டுக்கல் ஸ்ரீசத்ய சுபா மருத்துவமனையில் பிறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி பிறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

---

BEFORE THE LEARNED DISTRICT MUNSIFF COURT AT KODAIKANAL
I.A.NO.03 Of 2025 in
O.S.NO. 64 Of 2024

M.Kulanthai Raj(M 59/2024),
S/O Mariyappan, Door No, 52, Kurinjinagar, Kodaikanal, Villpatti Village, Dindigul 624101.
...Plaintiff

-Against-

1.Mr. Ramesh Ramanathan,
S/o. Vaithiyanathan, Door No.54/304, Sophia Illam, M.M. Street, Kodaikanal, Dindigul 624101.
2. Uma Ram,
W/o V.Ramesh Ramanathan,
5.G.L. Balasubramaniyam,
S/o Mr. G.Lakshiminarayanan,Flat B-13, SNR Flats, 122 Lake View Road, West Mambalam, Chennai 600033.
6.Mrs. Usha, W/o G.L. Balasubramaniyam,
...Defendants

PUBLIC NOTICE

To the Defendants:
Take notice that the suit in O.S.No.64 of 2024 has been filed before The Learned District Munsiff Court at Kodaikanal and an order of substituted service has been passed in I.A.No. 3 of 2025 on 30.7.2025 in O.S.No.64 of 2024. You are hereby informed that the Hon'ble Court has directed service of notice through this publication,and you are called upon to appear before the Hon'ble Court on 29.08.2025 either in person or through duly authorized advocate and to file your written statement/objections, if any, failing which the matter will be heard and decided ex parte. This notice is issued in compliance with the order passed by the Hon'ble Court in I.A.No 3 of 2025 in O.S. No. 64 of 2024, for substituted service by way of paper publication.

Counsel for the plaintiff
Advocate S.Manoj Immanuel

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.8275/2022/ஆ6
இ.ப. வ.எண்.309/2022/ஆ6

விஜயா, க/பெ. கணேசன் ,
குரும்பபட்டி , செந்துரை கிராமம்
நத்தம் வட்டம்,
திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாட்ச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் தந்தை பழனிமுத்து கடந்த 21.08.1997 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

---

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகங்கை
O.S No.144/2024

1.அங்குச்சாமி
2.மச்சக்காளை
3.ராஜேந்திரன்
4.சிவக்குமார்
5.மணிவாசகம் (ஷை வாதிகள் தங்களுக்காகவும் மற்றும் அய்யுருளிதச்சள்கண்மாய் கிராம மக்கள் என்ற ஸ்தானத்திலும்)
......... வாதிகள்

எதிர்

1.தமிழக அரசு அதன் சிவகங்கை ஆட்சியர் மூலம்
2.மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலகம் சிவகங்கை
3.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கோட்டாட்சியர் அலுவலகம் சிவகங்கை.
4.வட்டாட்சியர் அவர்கள், காளையார்கோவில் தாலுகா காளையார்கோவில் சிவகங்கை மாவட்டம்
5.ராஜ் த/பெ.செபஸ்தியான் சொர்ணவள்ளி நகர் மாந்தாளி ரோடு, காளையார்கோவில் சிவகங்கை மாவட்டம்.
......... பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி வழக்கு சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதிகள் தாங்களாகவும் மற்றும் அய்யுருளிதச்சன்கண்மாய் கிராம மக்கள் என்ற ஸ்தானத்திலும் தாக்கல் செய்து மேற்படி வழக்கும் O.S No.144/2024 என நம்பராகி எதிர்வரும் 29.08.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கின் பொருட்டு எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் வரும் 29.08.2025ந் தேதி சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். என இந்த அறிவிப்பின் மூலம் அறிவிக்கின்றோம்.

கு.செந்தில்குமார்
பி.ஏ.எல்.எல்.பி
அட்வகேட் /சிவகங்கை.



மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.26, 27 மற்றும் 28 ஆகிய பகுதிகளுக்கு செல்லூர் சோலை மகாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் மேயர்இந்திரணி பொன்வசந்த், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி ஆகியோர் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை நேற்று பார்வையிட்டனர்.

# பவுன் ரூ.75,200-ஐ தொட்டு தங்கம் விலை புதிய உச்சம்

**சென்னை, ஆக. 08-**

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று புதிய உச்சத்தை சந்தையில் எட்டி விற்பனையானது. கிராமுக்கு ரூ.20-ம், பவுனுக்கு ரூ.160-ம் தங்கம் விலை அதிகரித்து விற்பனை யானது.

தங்கத்தை மிகவும் பாதுகாப்பான முதலீடாக மக்கள் பார்க்கின்றனர். அதன் காரணமாக தங்கத்தை ஆபரணமாகவும் மற்றும் காசுகளாகவும் மக்கள் வாங்குவது வழக்கம். உலக அளவில் தங்கத்தை அதிகம் வாங்கும் முன்னணி நாடுகளில் இந்தியாவும் உள்ளது. தங்கம் விலை சர்வதேச அளவிலான பொருளாதாரம் மற்றும் சந்தை நிலவரத்துக்கு ஏற்ப ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. இவை தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கிய காரணிகளாக உள்ளன. கடந்த ஜனவரி மாத தொடக்கத்தில் இந்தியாவில் ஒரு பவுன் தங்கம் ரூ.58 ஆயிரமாக இருந்தது. பின்னர் தங்கம் விலை படிப்படியாக உயர்ந்தது. கடந்த ஜூலை 23-ம் தேதி தங்கம் விலை பவுனுக்கு ரூ.75,040 என்ற புதிய உச்சத்தை எட்டி இருந்தது. பின்னர் படிப்படியாக தங்கம் விலை ஏற்ற இறக்கத்துடன் இருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் (ஆக.6) தங்கம் விலை பவுனுக்கு மீண்டும் ரூ.75,000-ஐ கடந்திருந்தது. தொடர்ந்து நேற்றும் தங்கம் விலை அதிகரித்து புதிய உச்சத்தை எட்டி விற்பனையானது.

நேற்று (ஆக.7) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.20 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,400-க்கு விற்பனையானது. அதேபோல் பவுனுக்கு ரூ.160 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.75,200 என்ற புதிய உச்சத்தை எட்டி சந்தையில் விற்பனையானது. நேற்று முன்தினம் ஒரு பவுன் தங்கம் ரூ.75,040-க்கு விற்பனையானது. கடந்த சில ஆண்டுகளில் ரஷ்யா - உக்ரைன் யுத்தம், இஸ்ரேல் - பாலஸ்தீனம் போர், இஸ்ரேல் - ஈரான் போர், இந்தியாவுக்கு 50 சதவீத வரி விதித்துள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உள்ளிட்டவற்றின் காரணமாக சர்வதேச சந்தையில் தங்கம் விலை ஏற்றம் கண்டுள்ளதாக நகை வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

---

தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித்துறை

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 33/2025– 2026/க(க&ப)வ–1/சென்னை/ நாள்: 06.08.2025**
**ஒப்பந்தம்–LUMPSUM (இணையதள வழியில் மட்டும்) ஒரு உறை முறை**

தமிழ்நாடுஆளுநரின்சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (வரிகள் உட்பட) | முன்வைப்பு தொகை மற்றும் பணிகள் முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை-3, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, பழைய சிறை வளாகத்தில் உள்ள புதிய சென்னை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள ஆண்கள் விடுதி கட்டிடத்தில் (தரை தளம் முதல் எட்டு தளம் வரை) கழிப்பறை, குளியலறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் கழிப்பறைகள் மற்றும் பிற சிவில் பணிகள் புதிய தரை ஓடுகள், சுவர் ஓடுகள், கழிப்பறை கதவு, கழிப்பறை பொருத்துதல்கள், குழாய் லைன்கள் மற்றும் பிற சிவில் பணிகள் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்த்தல் செய்யும் பணி | ரூ.84.37 இலட்சங்கள் | ரூ.53,000/- 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு -4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி |
| 2. | சென்னை-3, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, பழைய சிறை வளாகத்தில் உள்ள புதிய சென்னை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள பெண்கள் விடுதி கட்டிடத்தில் (தரை தளம் முதல் ஆறு தளம் வரை) கழிப்பறை, குளியலறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் கழிப்பறைகள் மற்றும் பிற சிவில் பணிகள் புதிய தரை ஓடுகள், சுவர் ஓடுகள், கழிப்பறை கதவு, கழிப்பறை அறை பொருத்துதல்கள், குழாய் லைன்கள் மற்றும் பிற சிவில் பணிகள் புதுப்பித்தல் மற்றும் சிறப்பு பழுதுபார்த்தல் செய்யும் பணி | Rs.87.91 இலட்சங்கள் | Rs.54,000/- 4 (நான்கு) மாதங்கள் | |

1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 29.08.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 03.09.2025 மாலை 3.00 மணி வரை. 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 03.09.2025 மாலை 4.00 மணி. 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்

செ.ம.தொ.இ/4240/ஒப்பந்தப்புள்ளி/2025

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.

---

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வட்டாட்சியர் அலுவலகம், இராஜசிங்கமங்கலம், இராமநாதபுரம் மாவட்டம்

அறிவிக்கை எண்.அ1/4076/2025 — நாள்:08.08.2025.

இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகில் இராஜசிங்கமங்கலம் வருவாய் வட்டத்தில் காலியாக உள்ள ஒன்பது கிராம உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வி தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 08.08.2025 |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 07.09.2025 |
| வாசிப்பு மற்றும் எழுத்து திறன் தேர்வு நடைபெறும் நாள் | 08.10.2025 |
| நேர்காணல் நடைபெறும் நாள் | 23.10.2025 |
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| பணி விதிகள் | தமிழ்நாடு கிராம உதவியாளர் பணி விதிகள் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம்(ரூ.11,100/- -35,100/-) |
| வட்டத்தின் பெயர் | இராஜசிங்க மங்கலம் |
| நிரப்பப்பட உள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | 09 |

| வ. எண் | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | இன சுழற்சி எண். | இன சுழற்சி விபரம் |
|---|---|---|---|
| 1. | குலமாணிக்கம் | 6 | ஆதிதிராவிடர்(பொது) முன்னுரிமை பெற்றவர் (போரில் உடல்தகுதியை இழந்த முன்னாள் இராணுவத்தினர்) |
| 2. | வலமாவூர் | 7 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பெண்)(ஆதரவற்ற விதவை) முன்னுரிமை அற்றவர் |
| 3. | கொக்கூரணி | 8 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர(பெண்)(ஆதரவற்ற விதவை) (முன்னுரிமை அற்றவர்) |
| 4. | ஓடைக்கால் | 9 | பொதுப்போட்டி (பொது) (முன்னுரிமை அற்றவர்) |
| 5. | பெத்தார் தேவன் கோட்டை | 10 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர(பொது)(முன்னுரிமை அற்றவர்) |
| 6. | கலங்காப்புலி | 11 | பொதுப்போட்டி (பொது) (முன்னுரிமை அற்றவர்) |
| 7. | தும்படைக்கா கோட்டை | 12 | ஆதிதிராவிடர் (பெண்)(ஆதரவற்ற விதவை)( முன்னுரிமை அற்றவர்) |
| 8. | துத்தியேந்தல் | 13 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பொது)( முன்னுரிமை அற்றவர்) |
| 9. | ஆனந்தூர் | 14 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர (பொது) முன்னுரிமை அற்றவர் |

கல்வித்தகுதி:-
தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்.(குறிப்பு SSLC Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்). (குறைந்தபட்ச கல்வித்தகுதி. பத்தாம் வகுப்பு தோல்வி)

வயதுவரம்பு:-

| வயது வரம்பு | ST/SC(A)/SC/MBC/DNC/BC/BC(M) | OC |
|---|---|---|
| அதிகபட்ச வயது | 37 | 32 |
| குறைந்தபட்ச வயது | 21 | 21 |
| வயது குறித்து தகுதி ஏற்படுத்தும் தேதி | 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும் | |
| அரசாணை (நிலை) எண். 01 மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 13.09.2021.இன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. | | |
| மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வரம்புடன்10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும் | | |
| முன்னாள் ராணுவத்தினருக்கு 50 வயது. பொதுப்பிரிவினர். 55 வயது ST/SC(A)/SC/MBC/DNC/BC/BC(M) | | |

இதர தகுதிகள்/நிபந்தனைகள்:-

1. விண்ணப்பதாரர் இராஜசிங்கமங்கலம் வட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்
2. தமிழில் பிழையின்றி எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்
3. கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக, அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.312 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1)) துறை, நாள் 04.06.2025. இல் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி / இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் (Native Resident) நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
4. இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்படமாட்டாது. மாறாக இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லையெனில் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.
5. பணி நியமனத்தின்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
6. இருதார மனைவி உடையவர்களாக இருக்க கூடாது மற்றும் வேறு கணவர் மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்க கூடாது.
7. பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
8. நேர்முக தேர்வின் போது சான்றுகள் சரிபார்ப்பின் போதும் அசல் சான்றுகள் / ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
9. வாசிப்பு மற்றும் எழுத்து திறன் தேர்வு, நேர்காணல் நடைபெறும் நாள் மாறுதலுக்கு உட்பட்டவை.

விண்ணப்பிக்கும் முறை:-

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை https://ramanathapuram.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமீபத்திய புகைப்படத்தினை (கடவு சீட்டு அளவு) விண்ணப்பத்தில் ஒட்டி உரிய ஆவணங்களுடன் இராஜசிங்கமங்கலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 07.09.2025 அன்று மாலை 05.45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வருவாய் வட்டாட்சியர்,
இராஜசிங்கமங்கலம் வட்டம்.

வெ.ஆ.எண்.83/2025/செ.ம.தொ.அ/இராமநாதபுரம்.நாள்:07.08.2025

## இந்திய கிரிக்கெட் அணியில்
# விராட், ரோகித் எதிர்காலம்: விரைவில் பி.சி.சி.ஐ. முடிவு



**மும்பை, ஆக. 08-**

இந்திய கிரிக்கெட் அணியில் விராட், ரோகித் சர்மாவின் எதிர்காலம் குறித்து பி.சி.சி.ஐ. விரைவில் முடிவு செய்ய உள்ளது.

**ரோகித், கோலி ஓய்வு...**

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இந்திய அணிக்காக பல்வேறு போட்டிகளில் வெற்றியை பெற்று தந்துள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த டி20 உலகக்கோப்பை தொடரை வென்ற பின்னர் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். இந்நிலையில், யாரும் எதிர்பார்க்காத வண்ணம் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக இருவரும் சமீபத்தில் அறிவித்தனர்.

**2027 வரை...**

இந்த முடிவு அவர்களது ரசிகர்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதனையடுத்து ஒருநாள் போட்டிகளில் மட்டுமே தொடர்ந்து விளையாட உள்ள அவர்கள் அடுத்த உலகக்கோப்பை (2027) வரை விளையாடுவதை இலக்காக கொண்டுள்ளனர். இருப்பினும் அவர்களால் ஒருநாள் உலகக்கோப்பை வரை தொடர்ந்து பார்மில் இருக்க முடியுமா? என்பது சந்தேகம் தான்.

**பதிலடி...**

அந்த உலகக்கோப்பை தொடருக்கு முன்னதாக இந்திய அணி ஏறக்குறைய 27 ஒருநாள் போட்டிகளில் மட்டுமே விளையாட உள்ளது. அந்த போட்டிகளில் இருவரும் தொடர்ந்து அசத்தினால் மட்டுமே உலகக்கோப்பை வரை இந்திய அணியில் இடம்பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. இதனிடையே இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அவர்கள் இல்லாமல் இந்திய அணியால் சாதிக்க முடியுமா? என்று கேள்விகள் நிலவின. அந்த கேள்விகளுக்கெல்லாம் சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி சிறப்பாக செயல்பட்டு தக்க பதிலடி கொடுத்தது.

**விரைவில் முடிவு...**

இந்நிலையில் ஒருநாள் கிரிக்கெட்டிலும் அவர்களின் எதிர்காலம் குறித்து பி.சி.சி.ஐ. விரைவில் முடிவெடுக்க உள்ளதாக கூறப்படுகிறது. கம்பீர் மற்றும் தேர்வுக் குழுவினர், கோலி மற்றும் ரோகித் சர்மாவை 2027 உலக கோப்பை வரை தொடர அனுமதிப்பதா அல்லது இளம் வீரர்களுக்கு வழிவிடுவதா என்பது குறித்து விரைவில் முடிவெடுக்க உள்ளனர்.

**தெளிவான திட்டம்...**

இது குறித்து பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் கூறுகையில், ஆம், இது குறித்து விரைவில் விவாதிக்கப்படும். அடுத்த உலகக்கோப்பைக்கு (நவம்பர் 2027) இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் உள்ளது. கோலி மற்றும் ரோகித் இருவரும் அந்த நேரத்தில் 40 வயதை எட்டுவார்கள், எனவே எங்கள் கடைசி வெற்றி 2011 இல் கிடைத்ததால், பெரிய போட்டிக்கு ஒரு தெளிவான திட்டம் இருக்க வேண்டும். சரியான நேரத்தில் சில இளம் வீரர்களையும் முயற்சிக்க வேண்டும்.

**ஒருநாள் சுழற்சி...**

பாருங்கள், கோலி மற்றும் ரோகித் இருவரும் அணிக்கும் வெள்ளை பந்து கிரிக்கெட்டுக்கும் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்கள் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் சாதித்துள்ளனர். எனவே, யாரும் அவர்களை ஓய்வு பெறுமாறு கட்டாயப்படுத்தப் போவதில்லை என்று நான் நினைக்கிறேன், ஆனால் அடுத்த ஒருநாள் சுழற்சி தொடங்குவதற்கு முன்பு அவர்கள் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் எங்கு நிற்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கு சில நேர்மையான மற்றும் தொழில்முறை உரையாடல்கள் இருக்கும். அது அதைப் பொறுத்தே எல்லாம் அமையும்'' என்று கூறப்பட்டது.

# பும்ராவின் தரத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம்: சச்சின்



**மும்பை, ஆக. 08-**

இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவின் தரத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

**பும்ரா இல்லாததால்...**

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடர் 2-2 என்ற கணக்கில் டிராவில் முடிவடைந்தது. இந்தத் தொடரின்போது ஜஸ்பிரீத் பும்ரா விளையாடாத 2 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றது என்ற ரீதியில் செய்திகள் வெளிவந்தன.

**தற்செயலான நிகழ்வு...**

இதுதொடர்பாக சச்சின் டெண்டுல்கர் கூறியது: "ஜஸ்பிரீத் பும்ரா விளையாடாத 2 போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றது தற்செயலான நிகழ்வு தான். வர் விளையாட 2 போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றது என்பது குறித்து பலர் விவாதித்து வருகின்றனர். இதை பெரிதாக எண்ணக்கூடாது. அதையும், இதையும் முடிச்சுப் போட்டு பார்ப்பது சரியல்ல. ஜஸ்பிரீத் பும்ராவின் திறமையை நான் நன்றாக அறிவேன். அவரது தரத்தை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாம்.

**நம்ப முடியாதவை...**

பும்ராவின் தரம் விதிவிலக்கானது. கிரிக்கெட்டில் அவர் செய்த சாதனைகள் நம்ப முடியாதவை. எந்த சந்தேகமும் இல்லாமல் அவர் திறமையான வீரர் என்று சொல்வேன். சிறப்பாக பந்து வீசி இந்திய அணியில் ஒரு நிலையான வீரராக அவர் வலம் வருகிறார். 3 வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் தன்னை சிறந்த வீரர் என்று நிரூபித்து வருகிறார். மற்ற எல்லோருடனும் ஒப்பிடும்போது அவரை நான் முதலிடத்தில் வைப்பேன்.

**மறக்கக்கூடாது...**

இங்கிலாந்தில் அவர் விளையாடிய 3 டெஸ்ட் போட்டிகளில் 2 முறை 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். இதன்மூலம் அவரது செயல்பாட்டை நாம் புரிந்து கொள்ள முடியும். அவர் பங்கேற்ற போட்டிகளில் எல்லாம் சிறப்பாக பந்துவீசி விக்கெட்களைக் கைப்பற்றியிருக்கிறார். அதை யாரும் மறக்கக்கூடாது.

**திருப்புமுனை...**

அதேபோல் வாஷிங்டன் சுந்தர் இந்தத் தொடரில் சிறப்பாக பந்துவீசி விக்கெட்களைக் கைப்பற்றி தேர்வாளர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றியுள்ளார். அவர் களத்தில் விளையாடும் போதெல்லாம் அணிக்கு தேவையானதை செய்தார். 4-வது டெஸ்ட் போட்டியின் 2-வது இன்னிங்ஸில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் விக்கெட்டை வாஷிங்டன் சுந்தர் கைப்பற்றியது திருப்புமுனையாக அமைந்தது.

**சரியான முடிவு...**

4-வது டெஸ்ட் போட்டியின்போது ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர் ஜோடி மிகச்சிறப்பாக விளையாடி அனைவரின் பாராட்டுகளையும் பெற்றது. அவர்கள் போட்டியை டிராவில் முடிப்பதற்காக சிறப்பாக விளையாடினர். அந்தப் போட்டியின்போது இந்திய அணி நிர்வாகமும், வீரர்களும் எடுத்த முடிவு சரிதான். போட்டியை முன்னதாகவே முடித்துக் கொள்ள இந்திய அணி ஒப்புக்கொள்ளாதது சரியான முடிவுதான்'' என்று சச்சின் கூறினார்.

# ரிஷப் பந்த்திடம் மன்னிப்பு கேட்ட வோக்ஸ்

**லண்டன், ஆக. 08-**

இந்திய அணியின் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த்திடம் மன்னிப்பு கேட்டதாக இங்கிலாந்து அணியின் வேகப் பந்துவீச்சாளர் கிறிஸ் வோக்ஸ் கூறியுள்ளார்.

**தொடர் சமன்...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அண்மையில் நிறைவடைந்தது. ஓவலில் நடைபெற்ற கடைசி டெஸ்ட்டில் த்ரில் வெற்றி பெற்ற இந்திய அணி, தொடரை 2-2 என சமன் செய்தது.

காலில் எலும்பு முறிவு...

மான்செஸ்டரில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் போட்டியின்போது, இந்திய அணியின் விக்கெட் கீப்பரான ரிஷப் பந்த்துக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. கிறிஸ் வோக்ஸ் வீசிய பந்தை அடிக்க முயன்று கால் விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இதனையடுத்து, அவர் ஓவலில் நடைபெற்ற கடைசி டெஸ்ட் போட்டியிலிருந்து விலகினார்.

**மன்னிப்பு கேட்டேன்...**

தனது பந்துவீச்சில் ரிஷப் பந்த்தின் கால் விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டதற்காக அவரிடம் மன்னிப்பு கேட்டதாக இங்கிலாந்து வீரர் கிறிஸ் வோக்ஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேர்காணல் ஒன்றில் அவர் பேசியதாவது: இன்ஸ்டாகிராமில் என்னுடைய புகைப்படத்தை சல்யூட் எமோஜியுடன் ரிஷப் பந்த் பகிர்ந்துள்ளார். அதனால், அவருக்கு நான் நன்றி கூறினேன். அவரது அன்புக்கு என்னுடைய நன்றியை தெரிவித்தேன். அவரது கால் தற்போது நன்றாக இருக்கும் என நம்புகிறேன். என்னுடைய பந்துவீச்சில் அவருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால், அவரிடம் மன்னிப்பு கேட்டேன்.

**நம்ப முடியாத விதம்...**

காயத்துடன் ஓவல் டெஸ்ட்டில் நான் களமிறங்கியதை இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில் பாராட்டினார். உங்களது தைரியம் நம்பமுடியாத விதமாக இருக்கிறது எனக் கூறினார். இந்த தொடரில் நீங்கள் சிறப்பாக விளையாடினீர்கள். உங்களது அணி சிறப்பாக செயல்பட்டது என அவரிடம் நான் கூறினேன் என்றார்.

## ஆசிய கோப்பை: பாக்., விலகல்

**ஆ**சிய கோப்பை ஹாக்கி போட்டி வருகிற 29-ந்தேதி முதல் செப்டம்பர் 7-ந்தேதி வரை பீகார் மாநிலம் ராஜ்கிரியில் நடைபெறுகிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, தென் கொரியா, ஜப்பான், சீனா, ஓமன், சீன தைபே ஆகிய 8 நாடுகள் பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டது. பகல்காம் தாக்குதலுக்கு பிறகு ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டு இருந்தது. அதே நேரத்தில் இந்தியா வருவதற்காக பாகிஸ்தான் சீனியர் அணி 18 வீரர்கள் மற்றும் 7 துணை ஊழியர்களை கொண்ட குழு விசாவுக்கு விண்ணப்பித்தது. இதனால் பாகிஸ்தான் அணி கலந்து கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆசிய கோப்பை போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்காது என்று ஹாக்கி இந்தியா அமைப்பின் நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த அணி போட்டியில் இருந்து விலகி உள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக ஆசிய கோப்பையில் விளையாட இயலாது என்று பாகிஸ்தான் ஹாக்கி சம்மேளனம் ஆசிய ஹாக்கி கூட்டமைப்புக்கு கடிதம் எழுதியுள்ளது. பாகிஸ்தான் வீரர்களுக்கு விசா வழங்க மத்திய அரசு தயாராக இருந்த போதிலும் அவர்கள் இந்தியாவுக்கு வர மறுத்து விட்டனர். பாகிஸ்தானுக்கு பதிலாக வங்காள தேசத்தை அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## யு.எஸ் ஓபன்: பரிசுத்தொகை உயர்வு

**எம்**எல்எஸ் தொடரில் விளையாடும்போது மெஸ்ஸிக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டு போட்டியிலிருந்து வெளியேறினார். இந்நிலையில், லீக்ஸ் கோப்பையில் இன்டர் மியாமியின் போட்டியைப் பார்க்க மெஸ்ஸி பார்க்க வந்திருந்தார். கடந்த போட்டியில் இரண்டு அசிஸ்ட் செய்து அசத்திய ரோட்ரிகோ டி பால் தனது முதல் கோலை இன்டர் மியாமி அணிக்காக இந்தப் போட்டியில் 45ஆவது நிமிஷத்தில் அடித்தார்.

தொடர்ந்து லூயிஸ் சௌரஸ் 59-ஆவது நிமிஷத்தில் பெனால்டியில் கோல் அடித்து தொப்பியை அணிந்து அதை தனது மகளுக்கு சமர்பித்தார். கிளப் யுனிவர்சிடாட் நேஷனல் அணி 39ஆவது நிமிஷத்தில் ஒரு கோல் மட்டுமே அடித்தது. கடைசியில் இன்டர் மியாமி 3-1 என வென்றது. இந்தப் போட்டியில் 56 சதவிகித பந்தினை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த இன்டர் மியாமி 488 பாஸ்களை செய்து அசத்தியது. இந்தப் போட்டியில் வென்றதன் மூலமாக நடப்பு சாம்பியன் இன்டர் மியாமி அணி லீக்ஸ் கோப்பையில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

## காலிறுதியில் இன்டர் மியாமி

எம்எல்எஸ் தொடரில் விளையாடும்போது மெஸ்ஸிக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டு போட்டியிலிருந்து வெளியேறினார். இந்நிலையில், லீக்ஸ் கோப்பையில் இன்டர் மியாமியின் போட்டியைப் பார்க்க மெஸ்ஸி பார்க்க வந்திருந்தார். கடந்த போட்டியில் இரண்டு அசிஸ்ட் செய்து அசத்திய ரோட்ரிகோ டி பால் தனது முதல் கோலை இன்டர் மியாமி அணிக்காக இந்தப் போட்டியில் 45ஆவது நிமிஷத்தில் அடித்தார்.

தொடர்ந்து லூயிஸ் சௌரஸ் 59-ஆவது நிமிஷத்தில் பெனால்டியில் கோல் அடித்து தொப்பியை அணிந்து அதை தனது மகளுக்கு சமர்பித்தார். கிளப் யுனிவர்சிடாட் நேஷனல் அணி 39ஆவது நிமிஷத்தில் ஒரு கோல் மட்டுமே அடித்தது. கடைசியில் இன்டர் மியாமி 3-1 என வென்றது. இந்தப் போட்டியில் 56 சதவிகித பந்தினை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த இன்டர் மியாமி 488 பாஸ்களை செய்து அசத்தியது. இந்தப் போட்டியில் வென்றதன் மூலமாக நடப்பு சாம்பியன் இன்டர் மியாமி அணி லீக்ஸ் கோப்பையில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

## நவோமி இறுதி போட்டிக்கு தகுதி

**க**னடாவில் நடைபெறும் 1000 புள்ளிகள் கொண்ட டென்னிஸ் போட்டியான கனடியன் ஓபனில் அரையிறுதியில் ஜப்பானின் நவோமி ஒசாகாவும் டென்மார்க்கின் கிளாரா டௌசனும் மோதினார்கள். இந்தப் போட்டியில் ஒசாகா 6-2, 7-6 (9-7) என நேர்செட்களில் வென்றார். கனடியன் ஓபனில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் ஜப்பான் வீராங்கனை என்ற வரலாற்றுச் சாதனையை ஒசாகா பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் பிறந்த கனடாவில் வசிக்கும் 18 வயதான விக்டோரியோ போகோவுடன் 27 வயதான நவோமி ஒசாகா இறுதிப் போட்டியில் மோதுகிறார். இது குறித்து ஒசாகா, "போகோ விளையாடுவதை இன்று பார்த்தேன். எங்களுக்கு முன்னிலையில் தான் அவர்களது போட்டி நடைபெற்றது. போட்டியில் அழுத்தமே இல்லாமல் மிகவும் அமைதியாக இருந்தது ஆச்சரியமாக இருந்தது. மேட்ச் பாயின்டிலிருந்து போகோ திரும்ப வந்தது இந்த வயதில் மெச்சத்தக்கதாக இருந்தது" என்றார். 2021-க்குப் பிறகு டூர் அளவில் தனது முதல் பட்டத்தை வெல்ல ஒசாகா முனைப்புடன் இருக்கிறார்.

# இந்திய டி-20 அணியில் ஷ்ரேயாஸ் ஆசிய கோப்பை தொடரில் பங்கேற்கிறார்

**மும்பை, ஆக. 08-**

2023 ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த உலகக் கோப்பைத் தொடருக்குப் பின்னர் ஷ்ரேயஸ் ஐயர் அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார். அவர் கடைசியாக 2023 ஆம் ஆண்டு டிசம்பரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 போட்டியில் விளையாடி இருந்தார். அதன்பின்னர், 2024 ஆம் ஆண்டில் கொல்கத்தா அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்ட ஷ்ரேயஸ் ஐயர் ஐ.பி.எல். கோப்பையை வென்று அசத்தினார்.

**ரூ. 26.75 கோடிக்கு...**

மேலும், கொல்கத்தா அணியில் இருந்து விலகி நிகழாண்டு ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணி அவரை ரூ. 26.75 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. ஐ.பி.எல்.லிலும் அதிரடியைத் தொடர்ந்த ஷ்ரேயஸ், 604 ரன்கள் குவித்து, பஞ்சாப் அணியை இறுதிப்போட்டி வரை அழைத்து வந்தார்.

**சேர்க்க மறுப்பு...**

அதுமட்டுமின்றி அவர் சையத் முஸ்டாக் அலி, ரஞ்சிக் கோப்பை, இரானி கோப்பை என அனைத்து உள்ளூர் போட்டிகளிலும் அசத்தினார். பிசிசிஐ ஒப்பந்தத்தில் இருந்து ஷ்ரேயஸ் ஐயர் கலட்டிவிடப்பட்டு, அதற்கு முழுமையான விளக்கமும் அளிக்கப்படவில்லை. அதன்பின் இந்திய டெஸ்ட் அணியிலும் ஷ்ரேயஸ் ஐயரை சேர்க்க இந்திய அணி நிர்வாகம் மறுத்து வந்தது.

**ஆசியக் கோப்பையில்...**

ஷ்ரேயஸ் ஐயர் சர்வதேச அணியில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதை முன்னாள் வீரர்களும், ரசிகர்களும் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். இந்த நிலையில் தான், சாம்பியன் டிராபியில் தேர்வு செய்யப்பட்ட ஷ்ரேயஸ் ஐயர், 5 போட்டிகளில் அதிரடியாக விளையாடி 243 ரன்கள் குவித்திருந்தார். இந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறும் ஆசியக் கோப்பைத் தொடரிலும், சொந்த மண்ணில் நடைபெறும் மேற்கிந்தியத் தீவுகள், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான போட்டிக்கு ஷ்ரேயஸ் ஐயர் தேர்வு செய்யப்படவுள்ளதாக பி.சி.சி.ஐ.-யின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

**டெஸ்ட் போட்டிலும்...**

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கும் இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி வருகிற அக்டோபர் 2 ஆம் தேதி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்திலும், இரண்டாவது டெஸ்ட் அக்டோபர் 10 முதல் 14 வரை தில்லியின் அருண் ஜேட்லி மைதானத்திலும் நடைபெறுகிறது.

# எம்.ஜி.ஆருடன் இருந்தவர்களே உண்மையான கம்யூனிஸ்ட்
## ராஜபாளையத்தில் இ.பி.எஸ். விமர்சனம்



**ராஜபாளையம், ஆக. 7-**

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' எழுச்சிப்பயணத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி. இன்று ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மக்களை சந்தித்தார். ராஜபாளையம் தொகுதியில் புதிய பேருந்து நிலையம் அருகே திரண்டிருந்த மக்கள் மத்தியில் இபிஎஸ் பேசியதாவது., ''ராஜபாளையம் நகரமே குலுங்கும் அளவுக்கு மக்கள் வெள்ளம் காட்சியளிக்கிறது. உங்கள் எழுச்சியே இந்த தொகுதியில் வெற்றியை நிரூபணம் செய்கிறது.

திமுக தலைவர் ஸ்டாலின் அவ்வப்போது, 'திமுக கூட்டணி வலுவானது' என்று பேசுகிறார். ஸ்டாலின் அவர்களே... ராஜபாளையம் பேச்சை நேரலையில் பார்ப்பீர்கள், உங்களுக்கு கூட்டணி வலிமையாக இருக்கலாம், எங்களுக்கு மக்கள் வலிமையாக இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை மக்கள் தான் ஆட்சிக்கான ஆயுதம் உண்மையில் திமுக ஆட்சியை அகற்ற தமிழக மக்கள் முடிவெடுத்துவிட்டனர்.

கூட்டணித் தலைவர்களை வைத்து விமர்சனம் செய்கிறார் ஸ்டாலின். திமுக அரசின் பிரச்னைகளை நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சி அடிமை சாசனம் எழுதிக் கொடுத்துவிட்டது. ஒரு முறையாவது திமுகவை எதிர்த்து அறிக்கை வெளியிட்டதா? கம்யூனிஸ்ட் ஆளுங்கட்சியா எதிர்கட்சியா என்று தெரியவில்லை. சட்டமன்றத்திலும் விமர்சனம் செய்வதில்லை, வெளியில் திமுகவை எதிர்த்துப் பேசுவதில்லை. ஆணவக் கொலைக்கு தனி சட்டம் கொண்டுவர வேண்டும் என்று கேட்பதற்கும் ஸ்டாலினிடம் அனுமதி வாங்கிப் பேச வேண்டிய அவல நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எடப்பாடி என்ன கொள்கை வைத்திருக்கிறார் என்று முத்தரசன் கேட்கிறார். எங்களுக்கு என கொள்கை வைத்திருப்பதால்தான் எங்கள் கட்சியை அசைக்க முடியவில்லை உங்களுக்கு கொள்கை இல்லாததால் தான் தேய்ந்துகொண்டுபோகிறீர்கள். எங்களுக்கு கொள்கை வேறு, கூட்டணி வேறு. தேர்தல் சூழ்நிலைக்கு ஏற்ப பாஜகவோடு கூட்டணி வைத்துள்ளோம். இதில் என்ன தவறு?

இதேபோல திமுகவும் பாஜகவுடன் கூட்டணி வைத்தது, மத்தியில் ஆட்சியிலும் அங்கம் வகித்தது. இதையெல்லாம் முத்தரசன் மறந்து விட்டார். பல கட்சிகள் இணைந்து தான் இன்டியா கூட்டணி என்று வைத்துள்ளீர்கள். மத்தியில் இருக்கும் ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதுதானே இந்த கூட்டணியின் அஜெண்டா..? உங்கள் எல்லோருக்கும் ஒரே கொள்கை இருக்கிறதா..? கேரளாவில் காங்கிரஸூம் கம்யூனிஸ்ட்டும் ஒரே கொள்கையோடு இருக்கிறதா? இதையெல்லாம் மறந்து விட்டு எங்களை மேற்கொண்டு விமர்சனம் செய்தால், எங்கள் கட்சியில் ராஜேந்திர பாலாஜி போன்ற அற்புதமாகப் பேசக்கூடியவர்கள் உங்களுக்குப் பதில் கொடுப்பாகள்.

உங்கள் கூட்டணி சந்தர்ப்பவாதக் கூட்டணி. 10 ஆண்டு காலம் ஒரே கூட்டணியாக இருந்தால் என்ன தனிப்பட்ட கொள்கை உங்களுக்கு இருக்கிறது...? வேண்டுமென்றால் திமுகவில் போய் சேர்ந்துகொள்ளுங்கள் ஒரே கொள்கையாகிவிடும். ஒருகாலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொள்கை இருந்தது, இப்போது அது காற்றோடு காற்றாகக் கரைந்துவிட்டது. எங்களைப் பொறுத்தவரை உங்கள் கட்சி தேய்ந்துவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் கருத்துகளைச் சொல்கிறோம். திமுகவில் கூட்டணி சேர்ந்தபிறகு கம்யூனிஸ்ட் கட்சியை திமுக விழுங்குகிறது என்பதை உணரவேண்டும்.

இன்று எவ்வளவு பிரச்னைகள் இருக்கின்றன..? விலைவாசி உயர்வுக்குக் குரல் கொடுத்தீர்களா..? தூய்மைப் பணியாளர் போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்தீர்களா? இதே தூய்மைப் பணியாளர்கள் அதிமுக ஆட்சியில் போராடிய நேரத்தில், ஸ்டாலின் அவர்களை சந்தித்து ஆதரவு கொடுத்தார். ஆட்சி அமைந்ததும் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்றார், ஆனால் இன்று ஆட்சியில் இருக்கும்போது அவர்களைக் கண்டுகொள்ளவில்லை. அந்தத் தூய்மைப் பணியாளர்களை கம்யூனிஸ்ட் தலைவர்கள் நேரில் சந்தித்துப் பேசியது உண்டா ?

போக்குவரத்து தொழிலாளர் போராட்டத்தை கம்யூனிஸ்ட் கண்டுகொள்ளவில்லை. எந்தப் போராட்டத்தையாவது கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்ததா? பழைய பென்ஷன் கேட்டு அரசு ஊழியர்கள் போராடுகிறார்கள், அவர்களுக்கு கம்யூனிஸ்ட் ஆதரவு கொடுத்ததா? செவிலியர்கள் போராடுகிறார்கள், அவர்களுக்காகப் பேசினீர்களா? டெல்டா மாவட்டத்தில் நெல் மூட்டைகளை வெளியில் சேமித்து வைப்பதால் மழையில் நனைந்து வீணாகிறது... அதற்கு கம்யூனிஸ்ட் குரல் கொடுத்ததா?

எம்ஜிஆர் இருக்கும் போது கருணாநிதி ஆட்சியின் ஊழல் பட்டியலை ஆளுநரிடம் கொடுக்கச் சென்றனர் அப்போது ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம் ஆகியோர் எம்ஜிஆருடன் சேர்ந்து சென்று கொடுத்தனர். அவர்கள் உண்மையான கம்யூனிஸ்ட். இன்றுள்ளவர்கள் மக்களுக்காகப் போராடுவதில்லை. கம்யூனிஸ்டுக்கு என்று அடையாளம் இருக்கிறது திமுகசெய்யும் தவறை நீங்கள் சுமக்காதீர்கள். அப்புறம் தேர்தல் நேரத்தில் உங்கள் கட்சி அடையாளம் தெரியாமல் போய்விடும் என்று எச்சரிக்கிறேன். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.

# உரிய காலத்துக்குள் அனுமதி வழங்காவிட்டால் திருவிழா செலவை போலீசாரே ஏற்க வேண்டும்
## சென்னை உயர் நீதிமன்றம் எச்சரிக்கை

**சென்னை, ஆக. 08-**

'கோவில் திருவிழாக்களுக்கு உரிய காலத்துக்குள் அனுமதி வழங்காவிட்டால் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரியே திருவிழா செலவுகளை ஏற்க வேண்டியது வரும்' என, சென்னை உயர் நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

கோவை மாவட்டம் பாப்பம்பட்டியில் வீரமாத்தி அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில், ஆகஸ்ட் 12ம் தேதி வரை ஆடி பெருந்திருவிழா நடத்தவும், ஒலிபெருக்கி பயன்படுத்த அனுமதி கோரியும், பாதுகாப்பு வழங்கக் கோரியும், அதே பகுதியை சேர்ந்த சுரேஷ்குமார் என்பவர், சூலுார் காவல் நிலைய இன்ஸ்பெக்டரிடம் மனு அளித்திருந்தார்.

இந்நிலையில், 'கடந்த ஜூலை 7ம் தேதி அளித்த விண்ணப்பம், இதுவரை பரிசீலிக்கப் படவில்லை' எனக் கூறி, சென்னை உயர் நீதிமன்றத்தில் சுரேஷ்குமார் வழக்கு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை, நீதிபதி பி.வேல்முருகன் விசாரித்தார். மனுதாரர் தரப்பில் வி.எஸ்.உஷாராணி, காவல் துறை தரப்பில் வழக்கறிஞர் பிரதாப் ஆகியோர் ஆஜராகினர்.

இரு தரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி பிறப்பித்த உத்தரவு: அனுமதி கோரி, ஜூலை 7ல் விண்ணப்பம் செய்துள்ளார். அதன் மீது, இதுவரை உரிய உத்தரவு பிறப்பிக்கவில்லை. எனவே, திருவிழாவுக்கு தகுந்த நிபந்தனைகளுடன், சூலுார் போலீசார் அனுமதி வழங்க வேண்டும். எதிர்காலத்தில் கோவில் திருவிழாக்களுக்கு அனுமதி கோரி விண்ணப்பங்களை பெற்றால், அவற்றை ஏழு நாட்களுக்குள் பரிசீலிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை பரிசீலிக்காமல், கடைசி நேரத்தில் நீதிமன்றத்தை நாடச் செய்யும் அதிகாரிகளுக்கு எதிராக, மாவட்ட எஸ்.பி.,க்கள் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்தால், கோவில் திருவிழா செலவை, சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் ஏற்க வேண்டி வரும். விழா நடக்கும் நாட்களில், உரிய பாதுகாப்பை போலீசார் வழங்க வேண்டும். இம்மனு முடித்து வைக்கப்படுகிறது. இவ்வாறு உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு

**ஒகேனக்கல், ஆக. 08-**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் கிருஷ்ண ராஜசாகர் (கே.ஆர்.எஸ்.) அணைக்கும், கபினி அணைக்கும் நீர்வரத்து அதிகரித்து ள்ளது. இந்த இரு அணைகளில் இருந்தும் தமிழகத்துக்கு காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நேற்று முன்தினம் காலை 18 ஆயிரம் கன அடியாக வந்தது. தற்போது காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை பெய்துள்ளது. இதன் காரணமாக நேற்று காலை 8 மணி நில வரப்படி 20 ஆயிரம் கன அடியாக தண்ணீர் அதிகரித்து வந்தது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

# தி.மு.க. புதிய நிர்வாகிகள் அமைச்சரிடம் வாழ்த்து



**ஒட்டன்சத்திரம், ஆக. 08-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் திமுக நகர வர்த்தகஅணி சார்பில் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் சதீஷ் பாபு, ரவிச்சந்திரன், முனியப்பன், பழனிச்சாமி, செல்லப்பாண்டி, கார்த்திகேயன் உள்ளிட்ட நிர்வாகிகள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணியிடம் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். நிகழ்வின்போது நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், கொத்தையம் வேலுச்சாமி உள்ளிட்ட நகர் மன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## பரமக்குடியில்
# 11-வது கைத்தறி தினத்தை முன்னிட்டு நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்



**பரமக்குடி, ஆக. 08-**

1905-ம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி அன்று இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வான சுதேசி இயக்கம் தொடங்கப்பட்டதை நினைவு கூறும் பொருட்டும், சமூக பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தறித் துறையின் பங்களிப்பை உணர்த்தும் பொருட்டும், கைத்தறி நெசவாளர்களை கௌரவப்படுத்தும் விதமாகவும், ஒவ்வொரு ஆண்டும் இதே நாள் தேசிய கைத்தறித் தினமானது கொண்டாடப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் 11-வது தேசிய கைத்தறி தினத்தினை முன்னிட்டு நெசவாளர்களுக்கான இலவச பொது மருத்துவ முகாம் மற்றம் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா எமனேஸ்வரம் சௌராட்ரா பேரவை அரங்கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவை பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் சரவண பெருமாள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். பரமக்குடி வட்டாட்சியர் வரதன், நகர் மன்ற உறுப்பினர் சேது கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பரமக்குடி சரக கைத்தறி உதவி இயக்குனர் சேரன் வரவேற்றார்.

இராமநாதபுரம் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் கார்த்திகேயன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜீவரெத்தினம், மருத்துவ அலுவலர் டாக்டர் பிரதீபா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

விழாவில் 10 பயனாளிகளுக்கு முத்ரா கடனுதவி வழங்கும் திட்டத்தின் மூலம் ரூ.50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.5 லட்சமும், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 பேருக்கு ரூ.7.17 லட்சமும், கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ் 430 பேருக்கு ரூ.28.71 லட்சத்திற்கு அச்சு மற்றும் விழுதுகள், மின் மோட்டார் பொருந்திய தார் சுற்றும் இயந்திரம், 120 ஹூக் ஜக்கார்டு பெட்டி, கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு தலா ரூ.1,30,000 மொத்தம் ரூ.2 லட்சத்து 70 ஆயிரம் ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டது. நெசவாளர்களுக்கான இலவச பொது மருத்துவ முகாம் நடைபெற்றது. கைத்தறி தினத்தை முன்னிட்டு கீழக்கரையில் உள்ள தாசீம் பிவி, மகளிர் கலைக் கல்லூரியில் ஆகஸ்ட் 6,7 ஆகிய இரு தினங்கள் சிறப்பு கைத்தறி கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி ஏற்பாட்டினை கைத்தறி துறை அதிகாரிகள் செய்தனர்.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம்



**நத்தம், ஆக. 08-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சேத்தூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடந்தது. இதற்கு திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம், திமுக மாவட்ட பொருளாளர் விஜயன், திமுக ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், சேக் சிக்கந்தர்பாட்சா, தாசில்தார் ஆறுமுகம், யூனியன் ஆணையாளர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல துணை தாசில்தார் சுந்தரபாண்டியன் வரவேற்றார். இந்த முகாமில் மகளிர் உரிமை தொகை, மாற்றத்திறனாளிகள் நலத்துறை, மின் வாரியம், சமூகநலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வீட்டுவசதி உள்ளிட்ட 13 அரசு துறைகளின் சார்பில் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெறப்பட்டது. முகாமில் திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நத்தம் அருகே
# வியாபாரியிடம் நகை, பணம் திருடியவர் கைது

**நத்தம், ஆக. 08-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே பரளி- தேத்தாம்பட்டியை சேர்ந்தவர் ராஜாங்கம் (31). காய்கறி வியாபாரி. இவர் கடந்த ஜூலை 17-ம் தேதி பைக்கில் வத்திபட்டிக்கு சென்ற போது பேட்டைக்குளம் பகுதியில் 3 பேர் வழிமறித்து அவரிடம் 2 பவுன் செயின் மற்றும் 10 ஆயிரம் பணத்தை பறித்து சென்றனர். இச்சம்பவம் குறித்து ராஜாங்கம் நத்தம் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில் சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தார்.

இந்நிலையில் சம்பவத்தில் ஈடுபட்ட லிங்கவாடியை சேர்ந்த மாதேஷ் (20) என்பவர் கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருவதாக நத்தம் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்கு சென்ற நத்தம் போலீசார் கிருஷ்ணகிரியில் இருந்த மாதேஷை கைது செய்தனர். மேலும் மாதேஷ் கொடுத்த தகவலின் பேரில் இச்சம்பவத்தில் ஈடுபட்ட மேலும் 2 பேரை தேடி வருகின்றனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## தேசிய கைத்தறி தினம்:
# விருதுநகரில் கைத்தறி கண்காட்சியை கலெக்டர் சுகபுத்ரா துவக்கி வைத்தார்



**விருதுநகர், ஆக. 08-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், கைத்தறித் துறை சார்பில், 11-வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு சிறப்பு கைத்தறி கண்காட்சியினை மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தொடங்கி வைத்தார். 11-வது தேசிய கைத்தறி தினத்தைக் கொண்டாடும் விதமாக விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்பு கைத்தறி கண்காட்சியினை மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்தார்.

பின்னர், கைத்தறி துறை சார்பில் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.9 லட்சம் மதிப்பிலான முதிர்வுத்தொகைக்கான காசோலைகளையும், நெசவாளர் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சம் மானியத்துடன் கூடிய கடனுதவிகளையும், நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,200 ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகளையும் என மொத்தம் 35 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.14.18 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். மேலும் நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் சுந்தரபாண்டியத்தில் விருதுநகர் மாவட்ட சுகாதாரத் துறையுடன் இணைந்து, வருமுன் காப்போம்'' திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் நெசவாளர்களுக்கு பொது மருத்துவம், மகளிர் மருத்துவம், குழந்தைகள் நலம், பல் மருத்துவம், சித்த மருத்துவம், இரத்த சர்க்கரை அளவு பரிசோதனை மற்றும் நவீன இ.சி.ஜி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் சுமார் 850 நெசவாளர்கள் பயனடைந்தனர். மேலும் கல்லூரி மாணவியர்களிடையே கைத்தறி இரகங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கைத்தறி இரகங்களைப் பிரபலப்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி விருதுநகர் வே.வ.வன்னியப் பெருமாள் மகளிர் கலைக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கைத்தறி உதவி இயக்குநர் வெங்கடேசலு உட்பட அரசு விற்பனையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரம் அருகே
# தேவிபட்டிணத்தில் கலெக்டர் ஆய்வு



**ராமநாதபுரம், ஆக. 08-**

ராமநாதபுரம் அருகே தேவிபட்டிணத்தில் பல்வேறு பணிகளை கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங்காலோன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினத்தில் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட கலெக்டர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளிக்குச் சென்று மாணவ, மாணவிகளை சந்தித்து அவர்களின் கல்வித்திறன் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து மாணவர்களுக்கு வழங்கவுள்ள உணவின் தரம் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் மாணவர்களுக்கு சுகாதாரமான முறையில் உணவு வழங்கிட வேண்டுமென அறிவுறுத்தினார். மேலும் தேவிப்பட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து தேவிப்பட்டினத்தில் இன்று 'உங்களுடன் ஸ்டாலின்'' திட்ட முகாம் நடைபெற்றதை கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பார்வையிட்டதுடன், பொதுமக்கள் மனுக்கள் வழங்கி வருவதை பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்தார். மேலும், அரசுத்துறைகளின் மூலம் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டதுடன், பொதுமக்கள் மனுக்களை சிரமமின்றி அந்தந்த துறைகளில் வழங்கிட ஏதுவாக அலுவலர்கள் பணிபுரிந்திட வேண்டும் எனவும்;, பெறப்படும் மனுக்களை அலுவலர்கள், பணியாளர்கள் உரிய ஆவணங்களுடன் கணினியில் பதிவு செய்திட வேண்டுமெனவும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் அரசுத்துறை அலுவலர்கள் உங்கள் பகுதிக்கு வந்து முகாமிட்டு மனுக்கள் பெறுவதால் பொதுமக்கள் இதுபோன்ற நல் வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென கலெக்டர் தெரிவித்தார். தொடர்ந்து அத்தியூத்து ஊராட்சியில் பொதுமக்களின் கோரிக்கை தொடர்பாக இ-பட்டா வழங்குவது குறித்து வருவாய்த்துறை அலுவலர்களுடன் மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# காய்கறிகள் சாகுபடி செய்ய இடுபொருள்கள் வழங்க நிதி ஒதுக்கீடு: கலெக்டர்

**விருதுநகர், ஆக. 08-**

விருதுநகர் மாவட்டத்திற்கு, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை மூலம் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.77.175 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப்பயிர் பரப்பு விரிவாக்கம் இனத்தின் கீழ் அரசு மானியமாக பாரம்பரிய காய்கறிகள் சாகுபடிக்கு அரசு மானியமாக ஒரு எக்டருக்கு ரூ.24 ஆயிரம் வீதம் 45 எக்டருக்கு ரூ.10.80 லட்சம், மிளகாய்ப்பயிருக்கு ஒரு எக்டருக்கு அரசு மானியமாக ரூ.12 ஆயிரம் வீதம் 100 எக்டருக்கு ரூ.12 லட்சம், தென்னைப்பயிருக்கு ஒரு எக்டருக்கு அரசு மானியமாக ரூ.12 ஆயிரம் வீதம் 100 எக்டருக்கு ரூ.12 லட்சம் மற்றும் உதிரி மலர்கள் சாகுபடிக்கு பயிர்களுக்கு அரசு மானியமாக ஒரு எக்டருக்கு ரூ.12 ஆயிரம் வீதம் 75 எக்டருக்கு ரூ.9 லட்சம் ஆகமொத்தம் தோட்டக்கலைப்பயிர்கள் பரப்பு விரிவாக்கம் இனத்தின் கீழ் ரூ.43.80 லட்சம் மானியமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டுத்தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல் என்ற இனத்தில் மாடித் தோட்டத்தளைகள் விநியோகம் செய்திட 50 சதவீத மானியத்தில் 300 எண்களுக்கு ரூ.1.35 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

ஒரு தொகுப்பின் மொத்த விலை ரூ.900 அதில் 50 சதவீத மானியம் ரூ.450 மற்றும் பயனாளியின் பங்குத் தொகை ரூ.450 ஆகும். தோட்டக்கலைப் பயிர்களில் தேவை அடிப்படையிலான திட்ட இனங்கள் என்ற இனத்தின் கீழ் வேலிக்கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி செய்திட 50 சதவீத மானியத்தில் ஒரு எக்டருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் 100 எக்டருக்கு ரூ.5. லட்சம் மற்றும் தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதலை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவதற்கு 50 சதவீத மானியத்தில் ஒரு எக்டருக்கு ரூ.1,775 வீதம் 1500 எக்டருக்கு ரூ.26.625 லட்சத்திற்கு இடுபொருள்கள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற ஆர்வமுள்ள பயனாளிகள் https://tnhorticulture.tn.gov.in என்ற இணையதளத்திலோ, உழவன் செயலியில் பதிவு செய்தோ அல்லது அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து பயன்பெறுமாறு மாவட்ட கலெக்டர் சுகபுத்ரா தெரிவித்துள்ளார்.



**மதுரை மாவட்டம் பெரியார் பேருந்து நிலைய வளாகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பாக்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோ வாகனங்களை அமைச்சர் பழனிவேல்தியாகராஜன் வழங்கினார். உடன் கலெக்டர் பிரவீன், மேயர் இந்திராணி, துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உள்ளனர்.**



**மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை சார்பில் அதன் மாவட்ட செயலாளர் விநாயகமூர்த்தி தலைமையில் புதூரில் நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், இஷிகாநாச்சியார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், ஓட்டுரணி திருமுருகன், கே.வி.கே.கண்ணன், கவிச்செல்வம், ஜெயரீகன், ராஜமாணிக்கம், சுரேஷ், ராஜபாண்டி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

## கலைஞரின் 7-ம் ஆண்டு நினைவு தினம்:
# திருமங்கலம் மாவட்டச் செயலாளர் மணிமாறன் தலைமையில் தி.மு.க.வினர் அமைதி பேரணி



**திருமங்கலம், ஆக. 08-**

திருமங்கலம் நகரில் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் ஆயிரத்திற்டும் மேற்பட்ட தி.மு.க.வினர் பங்கேற்ற அமைதி பேரணி நடைபெற்றது.

முன்னாள் முதலமைச்சரும், மறைந்த தி.மு.க தலைவருமான கலைஞர் கருணாநிதியின் 7-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருமங்கலம் நகரில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் அமைதிப் பேரணியும், கலைஞரின் திருவுருவப் படத்திற்கு அஞ்சலி செலுத்திடும் நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

அமைதி பேரணியொட்டி ராஜாஜி சிலையிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் கழக கொடியுடன் பங்கேற்ற அமைதிப் பேரணி மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் துவங்கி முக்கிய வீதிகள் வழியாக சென்று மதுரை சாலையிலுள்ள தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தை வந்தடைந்தது. அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் தி.மு.க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மாலையணிவித்தும், மலர்களை துாவியும் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட அவைதலைவர் நாகராஜன், துணை செயலாளர் பாலாஜி, பொருளாளர் கொம்பாடி தங்கம், தொகுதி மேலிட பார்வையாளர் டிஸ்கோ அலாவுதீன், முன்னாள் எம்.எல்.ஏ லதா அதியமான், தலைமை செயற்குழு உறுப்பிளர்கள் ஏர்போட் பாண்டியன், இளமகிழன், முத்துராமன், பொதுக்குழு உறுப்பினர்கள் சிவமுருகன், ஆதிமூலம், நகர் செயலாளர் ஸ்ரீதர், நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், தனபாண்டியன், ஆலம்பட்டி சண்முகம், பாண்டியன், நாகராஜன், தனசேகரன், பேரூர் செயலாளர்கள் வருசை முகமது, முத்துகணேசன் மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், செல்வேந்திரன், ஆலங்குளம் செல்வம், பரமசிவம், சிவனேசன், ராஜசேகர், துணை அமைப்பாளர்கள் சுரேஷ், ஜெகதீஷ், சாதிக் முகைதீன் கருவேலம்பட்டி வெற்றி, தவமணி முருகன், வக்கீல் கவிஸ்ரீதினேஷ் கட்சி நிர்வாகிகள் நகர பொருளாளர் கவுன்சிலர் சின்னச்சாமி, திருக்குமார், வீரக்குமார். ஜாகிர்உசேன் செல்வம், காண்டை முருகன், இன்பம். தங்கப்பாண்டி, மற்றும் மதுரை தெற்கு மாவட்ட நகர, ஒன்றிய பேரூர் நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கலைஞரின் நினைவு நாளையொட்டி நேற்று ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கலைஞரின் சிலை இருக்கும் இடத்திலிருந்து மெரினா கடற்கரையில் அமைந்துள்ள நினைவிடம் வரை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதி பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் அமைச்சர் துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், டி.ஆர்.பாலு, கனிமொழி உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். ராஜபாளையம் தொகுதியில் புதிய பேருந்து நிலையம் அருகே திரண்டிருந்த மக்கள் மத்தியில் அவர் உரையாற்றினார். அருகில் விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ராஜேந்திர பாலாஜி உடன் உள்ளார்.

# இந்தியா வருகிறார் ரஷ்ய அதிபர்

**மாஸ்கோ, ஆக. 08-**

ரஷ்ய அதிபர் புதின் இந்தியாவுக்கு வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளளது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ரஷ்யா சென்றுள்ளார். இந்தநிலையில், ரஷ்ய அதிபர் புதினை நெரில் சந்தித்து இந்தியா வருமாறு அழைப்பு விடுத்தார். இதனை உறுதி செய்யும் விதமாக, ரஷ்ய அதிபர் புதின் இந்திய வருகை உறுதி செய்யப்பட்டுள்ளது. புதின் இந்திய வருகைக்கான தேதிகள் இறுதி செய்யப்படுகின்றன என்று பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தகவல் தெரிவித்துள்ளார். ஆகஸ்ட் 31ம் தேதி பிரதமர் மோடி சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளநிலையில், பிரதமர் மோடி சீனா செல்வதற்கு முன்னதாக ரஷ்ய அதிபர் புதின் இந்தியா வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்கா இந்தியாவுக்கு வரி கட்டுப்பாடுகளை விதித்து வரும் நிலையில் புதின் இந்தியா வருவது முக்கியத்துவம் வாய்ந்தாக பார்க்கப்படுகிறது. அஜித் தோவலின் பயணத்தை தொடர்ந்து வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கரும் இந்த மாத இறுதியில் ரஷ்யா செல்வதற்கான வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இன்று 9 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு

## வானிலை மையம் எச்சரிக்கை

**சென்னை, ஆக. 08-**

காஞ்சிபுரம், ராணிபேட்டை, திருவாரூர் உள்ளிட்ட 9 மாவட்டங்களில் இன்று (ஆகஸ்ட் 07) ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று திருவண்ணாமலை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், நாகபட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிபேட்டை ஆகிய 9 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில் நாளை (ஆகஸ்ட் 09) ஒரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. தமிழக கடலோரப் பகுதிகள், தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் வரும் ஆகஸ்ட் 11ம் தேதி வரை சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



மதுரை மாவட்டம், பெரியார் பேருந்து நிலைய வாளகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுதுறை சார்பில் தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியயத்தில் பதிவு பெற்ற 9 பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாகனங்களை தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார்.

# பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் குறித்து போலி செய்தி: தமிழக அரசு எச்சரிக்கை

**சென்னை, ஆக. 08-**

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் குறித்து போலி செய்தி பரப்புவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை எச்சரித்துள்ளது.

சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு பள்ளியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆய்வுக்கு சென்றதாகவும், அப்போது போதையில் இருந்த ஆசிரியருக்கு முதல் உதவி அளித்ததாகவும், பள்ளியின் நுழைவு வாயில் அருகே போதை மாத்திரை விற்றுக்கொண்டிருந்தவர்களை எச்சரித்ததாகவும் சமூக வலைத்தளத்தில் செய்தி பரவி வருகிறது.

இதனை பலரும் கேலி, கிண்டல் செய்து பகிர்ந்து வருகின்றனர். இதையடுத்து தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், “பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பற்றி போலிச் செய்தி பரப்பப்படுகிறது. இதனை சமூக வலைத்தளங்களில் பரப்புவோர் மீது பள்ளிக்கல்வித்துறை சார்பில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்” என்று கூறப்பட்டுள்ளது.



மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து வடக்கு 6- ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் அதன் பகுதி செயலாளர் அண்ணாநகர் எம்.என்.முருகன் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், இஷிகாநாச்சியார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், நீதிகாந்த், வக்கீல் அசோகன், அண்ணாநகர் ரவிச்சந்திரன், கே.வி.கே.கண்ணன், ஜோசப்தனிஸ்லாஸ், ஏ.முத்துசாமி, முருகானந்தம்,போஸ், சுசீந்திரன், பூமிநாதன்,வீரணன், கே.கே.நகர் மணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

